# கதைகள் அறுபது

**Rev.Dr.A.சேவியர்**
**B.Sc.M.A.(Theo).D.D.**
( சுவிஷேசகர்,போதகர்,எழுத்தாளர்

# கதைகள் அருபது

## (கதையும் கருத்தும்)


**ஆசிரியர்**

**Rev. Dr. A. சேவியர்** B.Sc., M.A, (Theology), D.D.

(சுவிசேஷகர், போதகர், எழுத்தாளர்)



**2015**

**மறு**

**வெளியீடு**

**"கடைசிகால விடுதலை ஊழியம் டிரஸ்ட்"**

எண். 3, 27வது தெரு, சிவசக்தி நகர்,

சி-பிரிவு, அண்ணனூர், சென்னை - 600 109.

போன்: 044-26375758, 26841363

செல் : 9444979822, 9444873848, 9444184648

facebook:- endtimedeliveranceministry; youtube:- endtimetrust

www.endtimedeliverance.com; e-mail:-info@deliverance.com

# கதைகள் அறுபது

First Edition : 2007
Second Edition : 2015
Total Copies : 1000
Book Serial No : 05/09

காணிக்கை : ₹ 30/-

**Copy right :**
End Time Deliverance Ministry Trust

**Sponsored by :**
**Pastor. John Ramesh**
No. 4, Selvam Nagar,
Lakshmipuram, Kolathur,
Chennai - 600 099.
Cell : 98844 27472

Printed by :
**Sathyam Achaham**
No. 109, M.T.H. Road, Villivakkam,
Chennai - 600 049. Ph: 044 31004200
Email : sathyamachaham@gmail.com

# முன்னுரை

## விசுவாசம் வெற்றியைத் தரும்

**இந்த கதைகள் எல்லாம் நான் "கண்டதும் கேட்டதும்."**

**இந்த கதைகள்,**

(i) **ஊழியர்கள் சத்தியத்தை பிரசங்கிக்கவும்,**

(ii) **விசுவாசிகள் சத்தியத்தை அதிகமாய் அறியவும் பயன்படும் என்று கர்த்தருக்குள் விசுவாசித்து சமர்ப்பிக்கிறேன்.**

*வாசியுங்கள் ! விசுவாசியுங்கள் !*

*ஆசீர்வாதம் பெறுங்கள் !*

*இயேசு சீக்கிரம் வருகிறார் !*

*ஆயத்தமாவோம் !! ஆயத்தமாக்குவோம் !!!*

சென்னை
நவம்பர் 2015

**- ஆசிரியர்**

**இயேசு சீக்கிரம் வருகிறார்!**

**ஆயத்தமாவோம்!!**

**ஆயத்தமாக்குவோம்!!!**

**இந்த மாத**

**"விசுவாச முழக்கம்"**

**வாசித்தீர்களா?**

## 1

ஒரு ஊரில் ஒரு நாள் மாலை வேளையிலே அனிதா, மெர்சி என்ற இரண்டு குழந்தைகள் வீட்டுக்கு வெளியே விளையாடிக் கொண்டிருந்தனர். பொழுது இறங்கி, இருட்டும் சூழ்நிலை ஆகிவிட்டது. அவர்கள் விளையாடிக் கொண்டே இருந்தனர். பிள்ளைகளின் தாயார் "ஏ.. அனிதா.." "ஏ... மெர்சி" "வாங்கோ, வாங்கோ...!" என்று சத்தமாகக் கூப்பிட்டாள். பிள்ளைகள் விளையாட்டு சந்தோசத்தில் வீட்டிற்கு வரவேயில்லை. தாயாருக்கு கோபம் வந்து விட்டது. "அட சனியனே, பிசாசே வாங்க" என்று மிகுந்த சத்தம் போட்டு கூப்பிட்டாள். சனியனே, பிசாசே என்ற அம்மாவின் கோப வார்த்தைகளைக் கேட்டு பிள்ளைகள் பயந்து வீட்டிற்குள் வந்து விட்டனர்.

ஒரு மாதம் கழித்து வீட்டிற்கு ஒரு பாஸ்டர் வந்து ஜெபம் பண்ணினார். அப்போது அந்த தாயாருக்கு பிசாசு பிடித்து ஆடியது. பாஸ்டர் பிசாசை கேட்டாராம் "நீ எப்படி இந்த தாயாரை பிடித்தாய்?" என்று. "நான் வீதி வழியாய் போய்க் கொண்டிருந்தேன்; இந்த அம்மா "பிசாசே சனியனே வா" என்றது; உடனே இந்த அம்மாவுக்குள் வந்தேன்" என்றது. இது சரியோ தவறோ; ஆனால், நீ சொல்லுகிறபடியே உனக்கு நிச்சயம் ஆகும் என்பது உண்மையான சத்தியம். நாவினால் ஜீவனும் உண்டு; மரணமும் உண்டு.

❖ ❖ ❖

## 2

தலைமுடித்தைலம் விற்கும் வியாபாரி ஒருவன் ஒரு கிராமத்துக்கு வந்தான். முடி வளருமென்று எல்லாரும் வாங்கினார்கள். ஒரு சிறுமி மட்டும் அதை வாங்க ஆசைதான்; ஆனால் பணமில்லை. அந்த வியாபாரி ஊரிலே விற்றுவிட்டு வெளியே போனான். இவ்வளவு பிரபலமான தைலத்தை விற்கும் வியாபாரியின் தலைமுடி எவ்வளவு நீளம் என்று சிறுமியும் பார்க்க விரும்பினாள். ஊருக்கு வெளியே போனவன் களைத்துப்போய் ஒரு மரத்தினடியில் அமர்ந்தான். அப்போதாவது அவன் தலைப்பாகையை

கழற்றமாட்டானா; அவன் தலைமுடியை பார்க்கலாமே என்று எண்ணி, அவனுக்கு தெரியாமல் ஒளிந்து, அந்த சிறுமி காத்திருந்தாள். அவனோ சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு உறங்க ஆரம்பித்தான். சிறிது நேரம் கழித்து, தூங்கினவன் விழித்தெழுந்து சுற்றும் முற்றும் பார்த்தான். ஒருவரும் இல்லை. தலைப்பாகையை கழற்றி முகம் துடைத்தான். சிறுமி பார்த்தாள்; தலையிலே ஒரு முடிகூட இல்லை; சுத்த வழுக்கை. "ஐயோ! வழுக்கை! வழுக்கை! பொய்தைலம்! பொய்தைலம்!" என்று கத்தினாள். இதை கேட்ட அவன் பதறிப் போய் அவளை ஓடிப்பிடித்து, "சிறுமியே! இதை யாரிடமும் சொல்லாதே! இந்த தைலம் சும்மா ஊருக்குத்தான் வியாபாரம்" என்றான்.

இப்படித்தான் பலர் இன்றைக்கு ஊருக்குத்தான் உபதேசம் பண்ணுகிறார்கள். தங்களுக்கென்று ஒன்றுமில்லை. முதலில் நாம் நடந்து காட்டி, பின் பிறரை நடக்கச் சொல்ல வேண்டும்.

❖ ❖ ❖

## 3

ஒரு முதலாளியிடம் கணக்குப்பிள்ளை வேலைக்காக இரண்டுபேர் வந்தனர். இன்டர்வியூவின் போது முதலாளி ஒரு பரீட்சை வைத்தார். கள்ளக் கணக்கு எழுதாத உத்தமன் யாரென்று கண்டுபிடிக்க விரும்பினார். ஒவ்வொருவனுக்கும் 1000 ரூபாய் கொடுத்து, "இதை ஒருவருக்குமே தெரியாமல் யார் ஒளித்து வைக்கிறானோ அவனுக்குத்தான் வேலை" என்றார். இருவரும் பணத்தை வாங்கிக்கொண்டு போனார்கள். கொஞ்ச நேரம் கழித்து வந்தார்கள். ஒருவன் சொன்னான்: "ஐயா! யாருக்கும் தெரியாமல் ஒளித்து வைத்து விட்டேனய்யா; என்னோடு வந்த இவனுக்கும் தெரியாதய்யா." இன்னொருவன் சொன்னான்: "ஐயா! எத்தனையோ இடத்தில் ஒளித்து வைத்துப் பார்த்தேன்; உலகத்திலுள்ள யாருக்குமே தெரியாமல் வைத்தாலும், ஒருவருக்கு மாத்திரம் தெரியாமல் வைக்க முடியவில்லை; அவர்தான் கடவுள்; அதனால் பணத்தை திரும்ப கொண்டு வந்துவிட்டேன்." இவனல்லவா தேவனுக்குப் பயந்த உத்தமன் என்று சொல்லி இவனுக்கே வேலை கொடுத்தான் முதலாளி.

தேவன் முகத்தையோ, வாய்ஜால வார்த்தையையோ பார்ப்பதில்லை; நமது உள்ளத்தின் ஆழங்களையும், நினைவுகளையும், அந்தரங்கங்

களையும் அறிந்திருக்கிறார் என்று விசுவாசிக்கிறவன்தான் உண்மையான தேவனுடைய பிள்ளை.

❖ ❖ ❖

## 4

ஒரு நாள் காரிலே ஒரு குடும்பம் போய் ஆக்சிடென்ட் ஆகி, கணவன், மனைவி, இரண்டு பிள்ளைகள் விபத்துக்குள்ளானார்கள். எல்லாரும் மரித்துப் போனார்கள். இதை ஆராய்ந்தறிய போலீஸ் வந்தது. கார் ரோட்டின் பள்ளத்திலே கிடந்தது. எப்படி ஆக்சினெ்ட் ஆனது என்று போலீசாரால் நிதானிக்க முடியவில்லை. பக்கத்தில் யாருமே இல்லை. ஒரே ஒரு குரங்கு மாத்திரம் மரத்திலே இருந்தது. 4 பிரேதங்களையும் ஆம்புலன்ஸ் வாகனத்தில் ஏற்றினார்கள். வண்டி கிளம்பும்போது அந்தக் குரங்கும் பிரேதங்களோடு வந்து உட்கார்ந்து கொண்டது. போலீசாருக்கு ஒன்றும் புரியவில்லை. பிரேதம் எங்கெல்லாம் பரிசோதனைக்கு போனதோ, அங்கெல்லாம் அந்தக் குரங்கும் பின்னாலேயே போனது. இதை கவனித்த போலீசார். இந்த விபத்துக்கும் குரங்கிற்கும் ஏதோ சம்பந்தம் உண்டென்று எண்ணி குரங்கோடு பழகிப் பேசும் ஒருவரைக் கூட்டி வந்தனர். அவன் குரங்கோடு பழகி, பின் விபத்து நடந்த இடத்திற்கு கூட்டி வந்தான். வரும் வழியில் சைகையிலே குரங்கிடம்; “குழந்தைகள் எங்கே இருந்தனர்” என்றான். தான் இருக்கிற பின் சீட்டில் ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக் கொண்டிருந்ததாக சைகையில் குரங்கு சொன்னது. “அப்பா அம்மா என்ன செய்து கொண்டிருந்தனர்” என்றான். குரங்கு, அம்மாவுடைய படத்தைக் காட்டி தூங்குவதுபோல் செய்து காட்டியது. அப்பாவை காட்டி அவன் குடித்துவிட்டு ஓட்டியதாக ஸ்டேரிங் பிடித்து சைகை காட்டியது. இதனால் தான் ஒருவருக்கும் தெரியாமல் கார் ரோட்டின் பள்ளத்தில் விழுந்தது என்று போலீசார் முடிவு கட்டினர். மிருகமான குரங்கே இந்த சாவிற்கு சாட்சி என்றால், இயேசுவின் மரணத்திற்கும், உயிர்த்தெழுதலுக்கும் மனிதர்களாகிய நாமே சாட்சியாய் இருக்க வேண்டுமல்லவா? இதைத்தானே தேவன் விரும்புகிறார்.

❖ ❖ ❖

## 5

ஒரு கப்பலிலே 14 நாள் பிரயாணத்தில் ஒருவன் போகிறான். முதல் மூன்று நாளாயிற்று; "சாப்பிட ஒன்றுமேயில்லை, கையில் காசும் இல்லை. 4வது நாளே இப்படியென்றால் இன்னும் 10 நாள் எப்படித் தாக்குப்பிடிப்பது? மரித்துப் போவேனே" என்று அவன் பயந்தான். "என்ன ஆனாலும் பரவாயில்லை; கப்பலில் உள்ள ஓட்டலில் போய் வயிறார சாப்பிடலாம்; அதற்காய் அவர்கள் என்ன தண்டனை கொடுத்தாலும் ஏற்றுக் கொள்ளலாம்" என்று எண்ணி நேரே கப்பலுக்குள் உள்ள ஓட்டலுக்கு வந்தான். தன் இஷ்டப்படி விதவிதாய் சாப்பிட்டான். திருப்தியாய் சாப்பிட்டபின் தெரியாமல் வெளியே வரப்பார்த்தான். அப்போது கவுண்டரில் உள்ளவர் "சார், திருப்தியாய் சாப்பிட்டீர்களா? சாப்பாடு எப்படி இருந்தது?" என்று கேட்டார். அந்த ஆளுக்கு தூக்கிவாரிப் போட்டது. இவர் பணமே கேட்கவில்லையே என்று ஆச்சரியப்பட்டான். டிக்கெட் வாங்கும் போதே, சாப்பாட்டுக்கும் சேர்த்து பணம் வசூலித்துவிட்டார்கள் என்று அவனுக்குத் தெரியவில்லை.

இப்படித்தான் இரட்சிக்கப்பட்ட கிறிஸ்தவர்கள் பலர் விசுவாசிகளாய் ஆனபோதே ஆபிரகாமின் ஆசீர்வாதங்கள் எல்லாம் கையளிக்கப்பட்டுள்ளன என்று புரியாமல் இருக்கின்றனர். விசுவாசிகள் செய்ய வேண்டியது:- அந்த வாக்குதத்தத்தை விசுவாசித்துப் பெற்றுக் கொள்ள வேண்டும்; வேறு எந்த காரியமும் செய்யத் தேவையில்லை.

❖ ❖ ❖

## 6

ஒருநாள் ஒரு சாமியாரும் சிஷ்யனும் போய்க் கொண்டு இருந்தனர். வழியிலே ஒரு ஆறு, அதிலே மார்பளவு தண்ணீர். அப்போது ஒரு வாலிபப் பெண்ணும் அந்த ஆற்றை கடக்க முடியாமல் யோசித்துக் கொண்டிருந்தாள். இதைப் பார்த்த சாமியார், "ஸ்திரியே! கவலைப்படாதே! நீ என் தோளின்மீது உட்கார்ந்துகொள்; நான் பத்திரமாக அக்கரையில் கொண்டுபோய் சேர்க்கிறேன்" என்றார். அவளும் சாமியாரின் மேல் பக்தி கொண்டு, ஆற்றை கடந்தாள். சாமியாரும் அவளை இறக்கி விட்டுவிட்டுப் போய்விட்டார். கூட வந்த சிஷ்யன், "சாமியாரே! சாமியாரே! என்னதான் இருந்தாலும், ஒரு பெண்ணைத் தூக்கி தோளிலே வச்சது பாவம்தான்" என்றான். சாமியார் சொன்னார்:- "ஆபத்துக்கு பாவம் இல்லேடா... நடடா சீக்கிரம்!" ஒரு மைல்

தாண்டி மறுபடியும் சீஷன்:- “சாமியாரே! நீர் அந்த வாலிபப் பெண்ணை தூக்கி வச்சது மகாபாவம்” என்றான். சாமியார் சொன்னார்:- “போடா அபிஸ்து; நான் ஒரு மைலுக்கு முன்னாலேயே அவளை இறக்கிவிட்டு விட்டேன். ஆனால் நீ தான் அவளை இன்னும் தூக்கி வச்சுக்கிட்டே இருக்கிறே; நீதான்டா பாவி” என்றார். இப்படித்தான் பலர், ஒருவன் தன்னுடைய தவறுகளை விட்டு வெளியே வந்தாலும், அந்தத் தவறுகளை அவர்கள் மறக்காமல் உள்ளத்திலே அசைபோட்டு, தாங்களே மறுபடியும் பாவியாகின்றனர். தேவன் மறந்தாலும் இவர்கள் மறப்பதில்லை.

❖ ❖ ❖

## 7

ஒரு அறிவாளி சென்னையிலிருந்து டில்லிக்கு Berth ல் போகிறார். வழியில் ஒரு ஸ்டேஷனில் இறங்கி டீ குடித்துவிட்டு வருகிறார். அப்போது வேறொரு பிளாட்பாரத்தில் நின்ற ரயிலைப் பார்த்தார்; தன்னுடைய ரயிலாகவே தெரிந்தது. உள்ளே போய் பெர்த்தில் படுத்துக்கொண்டார். அந்த ரயில் போய்க் கொண்டிருக்கும்போது, மேல் பெர்த்தில் உள்ளவரைக் கேட்டான் அறிவாளி:- “ஐயா! நீங்கள் எங்கே போக வேண்டும்?” அவர் சொன்னார்:- “நான் சென்னைக்கு செல்ல வேண்டும்.” அறிவாளிக்கு ஒரே ஆச்சரியம்! “என்னடாது; அறிவியல் எந்த அளவுக்கு முன்னேறி இருக்கிறது, கீழ் பெர்த்தில் உள்ளவன் டில்லி போகிறான்; மேல் பெர்த்தில் உள்ளவன் சென்னை போகிறான்; என்ன ஆச்சரியம்?”என்று வியந்தான். இப்படித்தான் நிறையப்பேர் தங்களை அறிவாளி என்று எண்ணிக் கொண்டு வேதவசனங்களை தங்கள் அறிவுக்கு ஏற்றபடி பிரசங்கிக்கிறார்கள்; அதற்காக நியாயமும் சொல்கிறார்கள். இதனாலேயே கிறிஸ்தவ வட்டாரம் சாட்சியாகவே இருப்பதில்லை.

❖ ❖ ❖

## 8

ஒரு ராஜா பக்கத்து நாட்டு ராஜாவை தோற்கடித்து அவனை கைதியாய் கொண்டு வந்து, அவனுக்குத் தூக்குத் தண்டனை நிறைவேற்ற வேண்டிய

நேரம்; "உன்னுடைய கடைசி ஆசை என்ன?" என்று ராஜா கேட்டார். மரிக்கப்போகிற ராஜாவிற்கு ஒன்றும் கேட்கத் தோன்றவில்லை. கடைசியில் சொன்னார்: "எனக்கு குடிக்க தண்ணீர் வேண்டும்." இதைக் கேட்ட ராஜா அலட்சியமாய் சிரித்துவிட்டு தண்ணீர் கொடுக்க உத்திரவிட்டார். தண்ணீரை கையிலேந்தி குடிக்காமலே நடுங்கிக் கொண்டிருந்தார் கைதி ராஜா. "ஏன் நடுங்குகிறாய்? இன்னும் ஏதாவது வேண்டுமா? சொல் செய்கிறேன்; நான் எப்போதும் சொல்வதைச் செய்கிறவன்" என்றார் ராஜா. கைதி ராஜா சொன்னார்:- "ராஜாவே! தயவு செய்து இந்த தண்ணீரை நான் குடிக்கும் வரையாவது என்னைக் கொல்லாதீர்கள்." மறுபடியும் ஏளனமாய் சிரித்துவிட்டு, இது என்ன பெரிய காரியம்; நிச்சயமாய் இந்தத் தண்ணீரை நீ குடிக்கும் வரை கொல்லமாட்டேன் என்றார். உடனே கைதி தன்னிடமிருந்த தண்ணீரை கொலுமண்டபத்திலே வீசியடித்து, "ராஜாவே! தரையிலே விழுந்த தண்ணீரை நான் குடிக்கத் தாருங்கள்; அதை நான் குடிக்கும் வரை நீங்கள் என்னைக் கொல்ல மாட்டேன் என்றீர்களே" என்றார் கைதி. ராஜாவுக்கு என்ன செய்வது என்று புரியவில்லை. தான் சொன்னபடி கைதியை கொல்லாமலே விடுதலை பண்ணினார்.

சாதாரண ஒரு ராஜாவின் வார்த்தையையே நம்பி காரியமாற்றினார் கைதி ராஜா; வெற்றியும் பெற்றார். ஆனால் ராஜாதி ராஜா, கர்த்தாதி கர்த்தாவான நம் தேவன் சொன்ன ஆசீர்வாத வார்த்தைகளை மனுஷன் நம்ப மறுக்கிறான். விசுவாசிக்கிறவன்தான் வெற்றி பெறுவான். (1 யோ.5:4)

❖ ❖ ❖

# 9

ஒருநாள் ரயிலில் இரவு நேரத்தில் ஒரு பெரியவர் பயணம் செய்தார். அவர் கையில் பணம் இருக்கிறது என்று அறிந்த ஒரு திருடனும் அந்த ரயில் பெட்டியில் ஏறினான். இரவு நேரம் ஆக, ஆக, இருவரும் படுத்துக்கொண்டே தூங்காமல் விழித்துக் கொண்டிருந்தனர். இவன் திருடன் என்று அறிந்து கொண்ட பெரியவருக்கும் தூக்கம் வரவில்லை. நாம் இருப்பதால்தான் பெரியவர் தூங்கவில்லை என்று எண்ணி திருடன் எழுந்து வெளியே போய்விட்டான். சிறிது நேரம் கழித்து வந்து படுத்துக்கொண்டான். பெரியவரும் எழும்பி வெளியே போய்விட்டு வந்து படுத்துக்கொண்டார். படுத்தவர் பெரிய குறட்டைவிட்டு தூங்கிவிட்டார். இதுதான் சமயம் என்று

திருடன் அவரது பெட்டி, தலையனை எல்லாம் ஆராய்ந்தான். பணமே இல்லை. டாய்லெட், ரூமெல்லாம் தேடினான்; எங்குமே பணம் கிடைக்கவில்லை. பணம் எங்கே போயிற்று என்று அவனுக்குப் புரியவில்லை. இப்படியே இரவு கடந்து போகின்றது; விடிகின்ற நேரம், திருடனால் திருடமுடியவில்லையே என்ற வருத்தம். நேரே பெரியவரிடமே கேட்போமே என்று, பெரியவரிடம், "ஐயா! உங்கள் பணம் எங்கே? இந்நாள்வரை என் திருட்டு தொழிலில் நான் தோற்றதே இல்லை; நான் உம் பணத்தை திருடமாட்டேன்; எங்கே அது?" என்றான். "என் பணம் பத்திரமாக உன் தலையணைக்குக் கீழே இருக்கிறது" என்றார் பெரியவர். இப்படித்தான் பிசாசானவன் நம்மை தோற்கடிக்க வரும் போது, நாம் அவனையும் அறியாமல், அவனைத் தோற்கடிக்க கூடிய யுக்திகளை, தேவ வசனத்தின் மூலம் கண்டுகொள்ள வேண்டும். பிசாசு பின்னே வெட்கப்பட்டு ஓடிப்போவான்.

❖ ❖ ❖

## 10

ஒரு ஊரிலே சர்ச் ஒன்றில் கிறிஸ்துமஸ் விழாவிற்கு டிராமா போடுகிறார்கள். அதிலே பிசாசாக நடிக்கும் ஒருவர், வீட்டிலேயே மேக்கப் பண்ணிக்கொண்டு, காரில் ஏறிப்போகிறார். அவர் அப்படியே பிசாசு போலவே காட்சியளித்தார். போகும் வழியிலே கார் ரிப்பேராகி விட்டது. உடனே அவரும் டிரைவரும், இறங்கி ரிப்பேர் பண்ணினார்கள்; முடியவில்லை. நேரம் ஆகிக் கொண்டே இருந்தது. முதல் சீனிலே பிசாசு வரவேண்டுமே என்று அவருக்கு பெருத்த வேதனை. அப்போது பக்கத்து ஊரிலே ஒரு சர்ச்சிலே அல்லேலூயா சத்தம் கேட்டது. டிரைவர் சொன்னார்:- "ஐயா! அந்த சர்ச் பாஸ்டரிடம் கார் இருக்கிறது. நான் போய் வாங்கி வருகிறேன்." அந்த ஆள் சொன்னார்:- "நீ போனால் லேட் ஆகும்; நானே போய் வாங்கி வருகிறேன்" என்று சொல்லிவிட்டு வேகமாய் ஓடினார். தான் பிசாசு போலவே காட்சியளிப்பதை மறந்துவிட்டார். அப்போது அந்த சர்ச் பாஸ்டர், "நீங்கள், பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள்!" என்று செய்தி கொடுத்துக் கொண்டிருந்தார். ஆராதனை முடிந்து விசுவாசிகள் ஆலயத்தை விட்டு வெளியே வந்தனர். அப்போது அந்த பிசாசு-வேடதாரியைக் கண்டு எல்லாரும் பயந்து கோயிலுக்குள்ளே ஓடினார்கள். வந்தவர், "ஏன் திரும்பி ஓடுகிறார்கள்? ஏதேனும் காட்டு மிருகம் பின்னாலே வருகிறதா!" என்று கேட்டு விட்டு, தானும் பயந்து கொண்டு கோயிலுக்குள்

ஓடினார். அதைக் கண்ட மக்கள் அலறியடித்துக் கொண்டு வெளியே ஓடிவந்தனர். அந்த ஆளுக்கு என்ன காரணம் என்று புரியவில்லை. தான் பிசாசைப் போல் இருக்கின்ற உணர்வும் அவருக்கில்லை. அவருடைய ஒரே எண்ணமெல்லாம் டிராமாவில் நடிக்க சீக்கிரம் போகவேண்டும்; பாஸ்டரிடம் கார், இரவல் வாங்க வேண்டும் என்பதுதான். கோவிலுக்குள் ஒருவரும் இல்லை; பாஸ்டர் எங்கே என்று இந்த ஆள் தேடினார். பாஸ்டர் ஒரு பெஞ்சுக்கு கீழே பயந்து நடுங்கிக் கொண்டிருந்தார். இந்த ஆள் அவரை நோக்கிப் போனார். அப்போது அந்த பாஸ்டர், "ஐயோ! பிசாசே! என்னை ஒன்றும் செஞ்சிடாதே - ஒரு நாளும் நான் உனக்கு விரோதமாய் செய்தி கொடுத்ததே இல்லை, இன்றைக்கு ஏதோ தெரியாத்தனமாய் செய்தி கொடுத்துவிட்டேன்; தயவுசெய்து மன்னித்து விடு. இனி ஒருநாளும் இப்படிச் செய்யமாட்டேன்" என்றார். அப்போதுதான் அந்த ஆளுக்கு தன்னுடைய பிசாசு வேஷம் புரிந்தது. தேவனுடைய பிள்ளைகள் பலர், இந்தக் காலத்தில் போதிக்கிற, படிக்கிற, கேட்கிற வசனப்படி நடப்பதில்லை.

❖ ❖ ❖

## 11

ஒரு ஊரில் ஐந்து குருடர்கள் வசித்து வந்தனர். அவர்களுக்கு யானையை பார்க்க வேண்டும் என்று நீண்ட நாள் ஆசை, பக்கத்திலுள்ள கோவிலில் யானை ஒன்று வந்திருப்பதை அறிந்து, அவர்கள் ஐவரும் அதை பார்க்க சென்றனர். ஒருவன் யானையின் காலை தொட்டு பார்த்துவிட்டு, "ஆஹா! யானை பெரிய உலக்கை போல் உள்ளதே" என்றான். யானைக் காதை ஒருவன் தொட்டுப் பார்த்துவிட்டு, "ஆஹா! யானை முறம் போல் இருக்கிறதே" என்றான். யானை வாலை ஒருவன் தொட்டுப் பார்த்துவிட்டு, "ஆஹா! யானை ஒரு சாட்டை கயிறு போல் உள்ளது" என்றான். இப்படியாய் ஒவ்வொருவரும் எடை போட்டனர்.

கிறிஸ்தவ உலகில் பிரகாசமில்லாத மனக்கண் உடையவர்கள் உண்டு. மனக்கண் குருடர்களும் உண்டு. இவர்கள் எல்லாருமே இப்படித்தான் தாங்கள் தொட்டுப் பார்த்ததையே உண்மை என்று கள்ள உபதேச சத்தியங்களை போதிக்கின்றனர். இவர்களால் கிறிஸ்தவம் கறையாகின்றது. இவர்களின் மனக்கண்களுக்காய் ஜெபிப்போம்! தேவனே மாற்றுவாராக!

## 12

ஒரு ஊரிலே கோழி ஒன்று பத்து குஞ்சுகளை கண்ணின் மணிபோல வளர்த்து வந்தது; செட்டையின் கீழே அரவணைத்து, பருந்துக்கும், பாழாக்கும் சங்காரத்துக்கும் பாதுகாத்து நடத்தியது. குஞ்சுகளும் அம்மாமேல் அன்பாயிருந்தன. "என்னைவிட்டு எங்கும் பிரிந்து போகக்கூடாது" என்று அம்மா அன்புக் கட்டளை கொடுத்திருந்தது. ஆனால் ஒருநாள் ஒரு குஞ்சு மாத்திரம் அம்மாவை விட்டுப் பிரிந்து காடுகள் பக்கம் போய்விட்டது. காணாமற்போன அந்த குஞ்சைத் தேடி கோழியும், மற்ற 9 குஞ்சுகளும் காட்டுப்பக்கம் போனது. அந்த காட்டுப் பாதை வழியாய் வந்த ஒருவன் நெருப்போடு பீடியை வீசியதால், அங்கிருந்த காய்ந்த சருகுகளில் பட்டு அந்த இடம் தீப்பிடித்தது. பிரிந்த போன குஞ்சோ "அம்மா! அம்மா!" என்று கத்திக் கொண்டு தீயின் மறுபுறம் நின்றது. கோழியோ அந்தக் குஞ்சை காப்பாற்ற முடியவில்லையே என்று கலங்கிக் கொண்டிருந்தது. அந்த நேரத்தில் ஒரு சூறாவளிக்காற்று அடித்ததினாலே அந்த குஞ்சு முழுதும் தீயில்பட்டு மரித்துப்போனது. அந்த தீ, இந்தக் கோழியை சுற்றியும் வந்தது. கோழி மீதமுள்ள குஞ்சுகளை தன் செட்டைக்குள்ளே வைத்து பதுங்கிக் கொண்டிருந்தது. மறுநாள், அந்த வழியாய் வந்தவர்கள், ஒரு கோழி படுத்திருப்பதை பார்த்து அதைப் போய்த் தூக்கினார்கள். என்ன ஆச்சரியம்! அந்தக் கோழி மரித்துப் போயிருந்தது. ஆனால் அந்தக் கோழியின் செட்டைக்குள்ளே 9 குஞ்சுகளும் பத்திரமாய் உயிரோடு இருந்தன.

இப்படித்தான் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நம் எல்லோருக்கும் ஜீவன் கொடுக்கும்படியாய், தன் ஜீவனை விட்டார். அவர் மாத்திரம் ஜீவன் கொடுக்காவிட்டால், நாமெல்லாம் நிர்மூலமாகியிருப்போம்; இயேசுவின் வார்த்தைப்படி நடவாதவர்களெல்லாம் பிரிந்து போன குஞ்சின் நிலைக்கு ஆளாவார்கள்.

❖ ❖ ❖

## 13

ஒரு ஊரிலே அண்ணன் - தம்பி இருவர் இருந்தனர். இருவருக்கும் சேர்ந்து ஒரு தென்னை மரம் இருந்தது. இருவரும் அதை பங்குபோட விழைகின்றனர்; அண்ணன் பயங்கர ஏமாற்றுக்காரன்; தம்பியோ சாது, எது

சொன்னாலும் நம்புகிறவன். அண்ணன் சொன்னான்:- "தம்பி! தென்னை மரத்தில் மேல்பாகம் எனக்கு, கீழ்பாகம் உனக்கு." தம்பியும் சரி என்றான். அதன் படியே தம்பியும் தினமும் தென்னைக்கு தண்ணீர் ஊற்றி வளர்க்கிறான். மரம் வளர்ந்தது; பாளை போட்டு இளநீர் வந்தது. அண்ணன் மரத்தின் மேலேறி உட்கார்ந்து கொண்டு தினமும் இளநீர் குடிப்பான். தம்பி பார்த்துப் பார்த்து ஏங்கினான். ஒரு நாள், தனக்கும் இளநீர் வேண்டுமென்று அண்ணனிடம் கெஞ்சினான். அண்ணன் சொன்னான்: "நமது ஒப்பந்தப்படி மேல்பாகம் எனக்கு, கீழ்பாகம் உனக்கு" என்றான். இதைக்கேட்ட தம்பி ஒப்பந்தத்தை விசுவாசித்து, அடுத்த நாள் ஒரு கோடாரி கொண்டு மரத்தை வெட்ட வந்தான். இதைப் பார்த்த அண்ணன்; "தம்பி, ஏன் மரத்தை வெட்டுகிறாய்?" என்று கேட்டான். தம்பி, "நமது ஒப்பந்தப்படி மேலே உனக்கு; கீழே எனக்கு" என்றான். இதைக் கேட்டதும் அண்ணன் பெரிதும் வருந்தினான்; ஆனாலும் அவனுக்குள் நல்ல எண்ணம் வந்தது. "உனக்கும் இளநீர் உண்டு தம்பி; நம் ஒப்பந்தம் சரியல்ல" என்றான்.

இப்படியாய் இந்த தவறான, ஒன்றுமில்லாத ஒப்பந்தத்தையே தம்பி நம்பினானே! கிறிஸ்தவனாகிய நீ இயேசுவின் விலையேறப் பெற்ற இரத்தத்தினாலே உறுதி செய்யப்பட்ட புது உடன்படிக்கையை, ஒப்பந்தத்தை விசுவாசித்து செயல்படுகிறாயா? இல்லை என்றால் உடனே விசுவாசி; செயல்படு; ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள். வெற்றி நிச்சயம்.

❖ ❖ ❖

## 14

ஒரு வாலிபன் நீண்டபாதை வழியாய் நடந்து போனான். வெயில் பயங்கரமாய் இருந்தது; அந்த இடமும் வனாந்தரம் போன்றது. வாலிபனுக்கு தாகம் ஏற்பட்டது. அருகிலே கிணறோ, ஆறோ, வாய்க்காலோ இல்லை. வாலிபன் துவண்டு போனான். திடீரென்று பார்த்தான், ஒரு அடிப்பம்பு தெரிந்தது. வேகமாய் அதனருகிலே போய் அடித்துப் பார்த்தான். தண்ணீர் வரவேயில்லை. அவன் நாக்கு வறண்டு போனது. அந்த இடத்திற்கு எதிரே ஒரு தண்ணீர் ஜக்கு காணப்பட்டது. அதிலே தண்ணீர் இருந்தது. அதனருகில் ஒரு பேப்பர் இருந்தது. அதை பிரித்துப் படித்தான். இந்த ஜக்கிலுள்ள தண்ணீரை அடிப்பம்பில் ஊற்றி அடிக்கவும்; தண்ணீர் நிறைய வரும் என்று எழுதியிருந்தது. "ஒருவேளை அந்தத் தண்ணீரை அடிப்பம்பில் ஊற்றி

அடித்தாலும், தண்ணீர் வராவிட்டால் என்ன ஆவது? உள்ள கொஞ்ச தண்ணீரும் வீணாகுமே" - இப்படியாய் அந்த வாலிபன் சிந்தித்தான். கடைசியிலே, பேப்பரில் எழுதியிருக்கும் வாக்கியம் உண்மையாயிருக்கும் என்று விசுவாசித்தான். விசுவாசித்தபடியே தண்ணீரை ஊற்றி அடித்தான். தண்ணீர் வரவேயில்லை. இருந்தாலும் நம்பிக்கையோடு அடித்தான். என்ன ஆச்சரியம்! நிறைய தண்ணீர் கொட்டியது. வாலிபன் தாகம் தீர குடித்து திருப்தியானான்; ஜக்கிலும் நிரப்பி வைத்தான்.

தேவனுடைய பிள்ளையே! "தசமபாகத்தை கொடு; இடங்கொள்ளாமல் போகுமட்டும் ஆசீர்வதிப்பேன்" என்ற தேவனின் வார்த்தையை நம்பி செயல்படு. கொடுங்கள்; கொடுக்கப்படும் என்ற தேவனின் வார்த்தையை நம்பி செயல்படு. வாலிபனுக்குப் போல உனக்கும் வறுமைத் தாகம், கடன் தொல்லை தாகம், பணத்தேவை தாகம் இருக்கலாம். உனக்காகவே தேவன் வசனத்தை வைத்திருக்கிறார். வாசித்து செயல்படு. வெற்றி உனதே!

❖ ❖ ❖

## 15

ஒரு ஊரிலே ஒரு பாட்டி வடை சுட்டாள். அதை ஒரு காகம் தூக்கிக் கொண்டு ஓடிவிட்டது. ஒரு மரத்திலே உட்கார்ந்து சாப்பிட ஆரம்பித்தது. அப்போது எப்படியாவது பெற்றுவிட வேண்டுமென்று ஒரு தந்திரம் பண்ணியது. நரி "காகமே; காகமே; நீ அழகாய் இருக்கிறாய், ஒரே ஒரு பாட்டுப்பாடு" என்று கேட்டது. காகம் வாயில் வடையை வைத்துக் கொண்டு பாடும்போது வடை கீழே விழுந்துவிடும் என்று நரி நம்பியது. ஆனால் காகமோ நரியின் தந்திரத்தை மிஞ்சும் அளவுக்கு அறிவு நிறைந்தது. வடையை வாயிலே வைக்காமல், கால்களுக்கிடையில் வைத்துக்கொண்டு, கா.. கா.. என்று கத்தியது. தந்திரம் பலிக்காததால் நரி சோர்ந்து போய்விட்டது.

இப்படித்தான் நரியைப்போல யாரை விழுங்கலாம் என்று கர்ஜிக்கிற சிங்கமாய் பிசாசானவன், தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்க அநேக தந்திர உபாயங்களை கையாளுகிறான். தேவ வசனத்தால் அவனை எதிர்த்து நின்றால் அவன் ஓடியே போவான். பழங்கால கதையிலுள்ள காகத்தைப்போல் வாயிலே வடையை வைத்துக் கொண்டே பாடி, உள்ளதையும் இழந்து போகாமல், இக்கால கதையிலுள்ள காகத்தைப்போல எச்சரிக்கையாய் இருப்போம்.

## 16

ஒருநாள் ஒரு வேட்டைக்காரன் ஒரு மரத்தின் கீழே அர்ந்துகொண்டு மேலே அமர்ந்திருந்த புறாவை நோக்கி அம்பை எய்ய ஆரம்பித்தான். தனது நண்பனான புறா மடியப் போகிறானே என்று அன்பின் மிகுதியால், அங்கே இருந்த எறும்பு, வேட்டைக்காரன் மேல் ஏறி கடித்துவிட்டது. இதனால் அவன் குறி தப்பிவிட்டது. புறா உயிர் பிழைத்து. பறந்து ஓடிவிட்டது. தன்னைக் காப்பாற்றிய எறும்புக்கு என்ன கைமாறு செய்வது என்று புறா காத்துக் கொண்டிருந்தது. ஒரு நாள் எறும்பு, தண்ணீர் நிரம்பிய குட்டையில் விழுந்துவிட்டது. வெளியே வர முடியாமல் தண்ணீரிலேயே மடிந்துபோக வேண்டிய நிலை வந்தது. அப்போது மரத்திலே அமர்ந்து பார்த்துக் கொண்டிருந்த புறா பரிதாபப்பட்டு காப்பாற்ற துடித்தது. மரத்திலிருந்து இலைகளை எறும்புக்கு நேராய் பறித்துப் போட்டது. எறும்பு இலைகளின் மேலேறி உயிர் பிழைத்தது.

அழிந்து போகிற உன்னை தப்புவித்து நித்திய ஜீவனைக் கொடுத்த ஆண்டவருக்கு, புறா எறும்புக்கு செய்தது போல நீ செய்ய வேண்டாம். உன்னிடமிருந்து அவர் எதிர்பார்க்கிற ஒன்றே ஒன்று. "நீ அவருக்கு சாட்சியாய் இருக்க வேண்டும். அவ்வளவுதான்; சாதாரண புறாவிற்கு இருந்த நன்றி உணர்வு கூட உனக்கும் எனக்கும் வேண்டாமா?" இன்றே தீர்மானிப்போம்! செயல்படுவோம்! வெற்றி நமதே!

❖ ❖ ❖

## 17

முக்கியமான பாதையின் பக்கத்தில் உள்ள தன்னுடைய கடையில் சுந்தரம் துணிகளைத் தைத்துக் கொண்டிருப்பான். ஒரு யானை ஒவ்வொரு நாளும் ஆற்றுக்குச் சென்று குளிப்பதற்காய் அந்த கடை வழியாய் போகும். அப்போது அது தனது துதிக்கையை கடைக்குள் நீட்டும். சுந்தரம் ஒரு பழமோ, தேங்காய் துண்டோ கொடுப்பான். ஒருநாள் அந்த தையல்காரன் வேலையில் மும்முரமாக இருக்கும்போது யானை வழக்கம்போல் துதிக்கையை நீட்டிக் கொண்டே இருந்தது. தையற்காரனுக்கு எதுவும் வாங்கிக்கொடுக்க நேரமில்லாதிருந்தான். யானை வந்து கடைமுன்னே நந்திபோல் நிற்பது விற்பனையை பாதித்தது. இதனால் யானையை விரட்ட வேண்டும் என்று

எண்ணி, ஓர் ஊசியினால் அதன் துதிக்கையில் குத்தினான். இதனால் கோபம் கொண்ட யானை அவ்விடத்தைவிட்டு அப்பால் சென்றது. ஆற்றில் குளித்துவிட்டு, தன் துதிக்கையில் சேற்றுத் தண்ணீரை நிரப்பிக்கொண்டு சுந்தரின் கடைப்பக்கம் சென்றது. கோபத்தோடு சேற்றுத்தண்ணீரை கடையிலிருந்த புதுத்துணிகள் மீதெல்லாம் கொட்டியது. எல்லாத் துணிகளும் பாழாயின. சுந்தரும் செய்வதறியாது விழித்தான்.

இப்படித்தான் யானையைப்போல் பலர், "கண்ணுக்குக் கண்; பல்லுக்குப் பல்;" என்ற நியாயப்பிரமாணப்படி பதிலுக்குப்பதில் செய்கின்றனர். ஆனால் தேவன் விரும்புவதோ அன்பு ஒரு கன்னத்தில் அறைந்தால், மறுகன்னம் காட்ட வேண்டும். சுந்தரத்தைப்போல தீமை செய்யக்கூடாது, சத்துருக்களை சிநேகிக்க, சமாளிக்க வேண்டும்.

❖ ❖ ❖

## 18

மேரி என்பவர் பிராணிகளிடம் அன்பாயிருப்பவள். அவள் ஒரு சிறிய ஆட்டுக்குட்டியை செல்லமாய் வளர்த்தாள். மேரி எங்கு சென்றாலும் அது கூடவே வரும். ஒருநாள் மேரி பள்ளிக்குச் சென்றிருந்த போது அந்த ஆட்டுக்குட்டியும் உடன் சென்றது. பள்ளிக் குழந்தைகள் ஆட்டுக்குட்டியைக் கண்டு, அதனோடு சிறிது விளையாடினர். பள்ளி ஆசிரியை ஆட்டுக்குட்டியைக் கண்டு, இனி உன் ஆட்டுக்குட்டியை பள்ளிக்குக் கொண்டு வராதே என்று சொல்லி அந்த ஆட்டுக் கட்டியை பள்ளியிலிருந்து வெளியே அனுப்பிவிட்டார்கள். ஆட்டுக்குட்டி வெளியே போய் ஒரு மரத்தடியில் நின்றது. மாலையில் பள்ளி முடிந்ததும் குழந்தைகள் வெளியே ஓடினார்கள். அந்த ஆட்டுக்குட்டி மேரியைப் பார்த்து அவளிடம் ஓடி, தன்னுடைய தலையை அவளுடைய கையில் வைத்துக் கொண்டது. மேரியும், ஆட்டுக்குட்டியும் வீட்டுக்குச் சென்றனர். மறுநாள் குழந்தைகள் ஆசிரியையிடம், "டீச்சர், ஏன் இந்த ஆட்டுக்குட்டி மேரியை நேசிக்கிறது?" என்று கேட்டனர். "மேரி அந்த ஆட்டுக்குட்டியை நேசிப்பதால் அது மேரியை நேசிக்கிறது" என்று ஆசிரியை பதிலளித்தார்.

பிரியமனாவர்களே - மேரி அன்பு காட்டியதால்தான், ஆட்டுக்குட்டி அவள்மேல் அன்புகாட்டியது - ஆனால் இயேசுவோ நாம் அன்பு காட்டாதபோதும், பாவிகளாயிருக்கையில் நமக்காக மரித்ததினாலே, நம்மேல்

வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணினார்; அதுதான் தேவ அன்பு. அல்லேலூயா!

❖ ❖ ❖

## 19

ஒருநாள் இரண்டு நண்பர்கள் காடு வழியாய் நடந்து போய்க் கொண்டிருந்தார்கள். அப்போது ஒரு கரடி, அவர்களைத் துரத்திக்கொண்டு வந்தது. இருவரும் பயந்து ஓடினர். அதிலே ஒருவனுக்கு மரம் ஏறத்தெரியும் என்பதால் அவன் மரத்தின்மேல் ஏறிவிட்டான். தனது நண்பனின் உயிரைப் பற்றி கொஞ்சமும் கவலையின்றி; தான் மட்டும் பிழைத்தால் போதுமென்று நினைத்து விட்டான். உயிர் நண்பன் இப்படிச் செய்து விட்டானே என்று மரம் ஏறத்தெரியாதவன் வருந்தினான். கரடி மிக அருகில் வந்துவிட்டது. திடீரென்று அவனுக்கு ஒரு எண்ணம் வந்தது. கரடி மரத்தில் ஏறமுடியாது, உண்மைதான். அது மரித்துப் போனவர்களையும் சாப்பிடாது என்ற உண்மை அவனுக்கு வெளிப்பட்டது. கரடி வரும்போது அவன் தரையிலே படுத்து, மூச்சை அடக்கிக்கொண்டு செத்தவனைப்போல் கிடந்தான். கரடி வந்து பார்த்தது; இவன் உயிரோடிருக்கிறானா, மரித்துவிட்டானா? என்று கரடிக்கே சந்தேகம். மூக்கு, வாய், காதுகளில் மோந்து பார்த்தது. மூச்சே இல்லாததால் இது பிணம் என்று எண்ணி அவனைக் கடித்துத் தின்னாமல் போய்விட்டது. கரடி போன உடனே மரத்திலிருந்தவன் இறங்கிவந்து, நண்பா - கரடி உன் காதில் என்ன சொல்லிற்று? என்று கேட்டான். “ஆபத்து காலத்தில் உதவாத நண்பனோடு சேராதே என்று சொன்னது” என்று பதிலளித்தான்.

ஆம்! தேவபிள்ளைகளே - வாழ்க்கை, ஜீவன் என்று வரும்போது பல உற்றார், உறவினர், நண்பர்கள் நம்மைவிட்டுப் பிரிந்து, நம்மை தனிமைப்படுத்துவதை பார்த்திருக்கிறோம். ஆபத்து நேரத்திலும் நம்மை விட்டுப் பிரியாத நேசர் ஒருவர் உண்டு. அவராலே நமக்கு பாதுகாப்பும், வெற்றியும் உண்டு. தன் ஜீவனையே நமக்காகக் கொடுத்த அன்பு நேசர் அவர். அவரே நம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து.

❖ ❖ ❖

## 20

ஒரு ஊரிலே 4 நண்பர்கள் இருந்தார்கள். அவர்கள் நால்வரும் ஒரு ஒப்பந்தம் பண்ணினார்கள். அதாவது இந்த நாள் முழுவதும் ஒருவரும் பேசாமல் மௌனமாய் இருக்க வேண்டும் என்று. நால்வரும் ஓரிடத்தில் அமர்ந்தார்கள். நேரம் உருண்டோடியது. திடீரென்று ஒரு விஷப்பூச்சி அந்த வழியாய் வந்தது. உடனே ஒருவன் "ஐயோ...! பூச்சி" என்று அலறினான். இரண்டாமவன், "ஏன்டா பேசுறே? நாமதான் பேசக்கூடாதென்று உறுதிமொழி எடுத்திருக்கிறோமே" என்றான். இதைக் கேட்ட மூன்றாமவன், "ஐயோ...! இவங்க இரண்டு பேரும் பேசிட்டாங்களே" என்றான். அப்போது மௌனமாயிருந்த 4வது ஆள், "நீங்க எல்லாரும் பேசிட்டீங்க, ஆனால் நான் மட்டும் பேசவே இல்லை" என்றான். ஆக 4 பேரும் பேசிவிட்டனர். இப்படித்தான் பலர் "நான் இப்படி இருப்பேன், அப்படி இருப்பேன்" என்று உறுதி எடுக்கிறார்கள். ஆனால் உலக நெருக்கத்தால் கொஞ்ச நாட்களிலேயே அந்த உறுதிமொழியை மறந்துவிடுகின்றனர். நாமெல்லாம் எதைச் செய்ய முடிவெடுத்தாலும் "தேவனுடைய கிருபையினாலே நான் இந்த உறுதிமொழியை நிறைவேற்றுவேன்" என்று சொல்ல வேண்டும், அப்போதுதான் எடுத்த உறுதியிலே நிலைத்து நிற்கமுடியும்.

❖ ❖ ❖

## 21

ஒரு வயலிலே நெல்மணிகள் அறுக்கும் தருவாயில் இருந்தன. அதற்குள்ளே ஒரு குருவி கூடுகட்டி குஞ்சுகளோடு வாழ்ந்து வந்தது. ஒருநாள் அந்தத் தாய்க்குருவி வெளியே இரைதேடப் போனபோது தோட்டக்காரன் வயலைப் பார்த்துவிட்டு, "நெல்மணிகள் முற்றிவிட்டன; நாளை அறுக்க வேண்டியதுதான்" என்று சொல்லிக்கொண்டே போனான். இதைக் கேட்ட குஞ்சுகள் பயந்திருந்தன. தாய்க்குருவி வந்தவுடன், "அம்மா! நாளைக்கு தோட்டக்காரன் அறுக்க போகிறான்; நமக்கு பாதுகாப்பு இல்லை; எனவே வேறொரு இடம் போகலாம்" என்றன. "அவன் நிச்சயம் அறுக்கமாட்டான்; கவலைப்படாதீர்கள்" என்று தாய் சொன்னது. 2,3 நாள் கழித்து தோட்டக்காரன் வந்து "வேலைக்காரன் கிடைக்கவே இல்லை; நாளை எப்படியாவது அறுத்துவிட வேண்டும்" என்று சொன்னான். இதைக் கேட்ட குருவிகள் தாயிடம் சொன்னதும், "வேலைக்காரர்கள் கிடைக்கமாட்டார்கள்;

நாளைக்கும் அறுக்கமாட்டான்" என்று தாய் சொன்னது. 4,5 நாள் கழித்து தோட்டக்காரன் வந்து "யாரையும் நம்பி பயனில்லை; தன் கையே தனக்குதவி, நாளைக்கே என் மனைவி பிள்ளைகளோடு வந்து அறுத்துவிட வேண்டியதுதான்" என்றான். இதை கேள்விப்பட்டதும் "தன் மேல் நம்பிக்கை உள்ளவன் நிச்சயம் அறுப்பான்" என்று சொல்லி தாய்க் குருவி வேறிடம் புறப்பட்டது.

தேவபிள்ளையே! தன்மேல் நம்பிக்கை உள்ளவன் எவனும் நினைத்ததை செய்து முடிப்பான்; வாழ்க்கையில் வெற்றி பெறுவான். அதை விடுத்து அடுத்தவர்கள் மேல் நம்பிக்கை உள்ளவன் வாழ்வடைய மாட்டான். அப்படியே கிறிஸ்தவன், "தேவகிருபையால், என்னால் எல்லாம் செய்ய முடியும்; நான் இயேசுவின் நாமம் தரிக்கப்பட்டவன்; வசனமே எனக்கு வழிகாட்டி, பாதுகாப்பு, வேலி" என்ற உணர்வு இருந்தால்தான் வெற்றிபெற முடியும். அதை விடுத்து, வரம் பெற்ற ஊழியர்களையோ, உலகில் அந்தஸ்து உள்ளவர்களையோ நம்பி போய்க்கொண்டிருந்தால், உன் இலக்கை நீ அடைய முடியாமலே போவாய்.

❖ ❖ ❖

## 22

ஒரு ஊரிலே ஒரு சாமியார் இருந்தார். அவர் ஒரு பாம்பை வளர்த்தார். அந்த பாம்புக்கு அவர் ஒரு அறிவுரை சொன்னார். அதாவது - "யாரையும் கடிக்கக் கூடாது." தினமும் அந்தப் பாம்பு வெளியே போய்விட்டு நல்லபடியாய் வந்தது. ஒரு நாள் அதன் உடம்பு முழுதும் காயத்தோடு வந்தது. சாமியார், ஏன்? என்று கேட்டார். "நீங்கள் தானே கடிக்கக்கூடாது என்று சொன்னீர்கள்; என்னை எதிர்த்து வந்தவனை நான் ஒன்றும் செய்யாததால் என்னை அடித்துவிட்டார்கள்; நான் தப்பித்து காயத்தோடு ஓடி வந்தேன்" என்று பாம்பு சொன்னது. அதற்கு சாமியார் சொன்னார்:- "உனக்கு அறிவும் விவேகமும் இல்லையே; உன்னை கடிக்க வேண்டாம் என்றுதான் சொன்னேன், சீற வேண்டாம் என்றா சொன்னேன்?" இப்படித்தான் பல கிறிஸ்தவர்கள் வசனத்தில் உள்ள அர்த்தத்தை சரியாக புரிந்து கொள்ளாமல் மேலோட்டமாகவே எடுத்துக் கொண்டு செயல்படுகிறார்கள். முடிவு இந்தப் பாம்பைப் போல் ஆகின்றது. ஒருவன் உன்னை கன்னத்தில் அடித்தால் திரும்பி அடிக்க வேண்டாம். அதற்காக அவன் அடிப்பது தவறு என்று

உணரும்படியாய் ஒரு வார்த்தை கூடவா சொல்லக் கூடாது? மன்னிப்புத்தன்மை தேவை தான். அதற்காக, அவன் குற்றத்தை கண்டித்து புத்தி கூறாமல் இருக்கலாமா?

❖ ❖ ❖

## 23

ஒரு ஊரிலே ஒரு பெண் கணவனுக்கு தெரியாமலே இரட்சிப்புக்கு ஒப்புக்கொடுத்து ஞானஸ்நானம் பெற்றுவிட்டாள். இந்த விபரம் கணவனுக்கு தெரிந்தால் என்னாகுமோ என்று எண்ணி அவள் அவனிடம் சொல்லவில்லை. தேவனிடம் தொடர்ந்து ஜெபித்தாள். குடிகார கணவனும் இரட்சிக்கப்பட வேண்டும் என்று வேண்டினாள். இதற்கிடையில் இவள் ஞானஸ்நானம் பெற்ற விஷயம் குடிகார கணவனுக்கு எப்படியோ தெரிந்துவிட்டது. அவனுக்கு ஞானஸ்நானம், இரட்சிப்பு இதெல்லாம் ஒன்றும் தெரியாது. ஏதோ மனைவி தப்பு பண்ணிவிட்டாள் என்று எண்ணி, அவளை அடிக்க வருகிறான். "ஏன் ஞானஸ்நானம் எடுத்தாய்? இனிமேல் எடுப்பாயா?" என்று மிரட்டினான். அவளோ, "அத்தான், இனிமேல் ஞானஸ்நானம் எடுக்கவே மாட்டேன்" என்றாள். அவளின் பதிலைக் கேட்ட உடனே அவன் ஆச்சரியமடைந்தான். "இனிமேல் எடுக்கமாட்டேன் என்கிறாளே" என்று சொல்லி அவளை அடிப்பதை விட்டுவிட்டான். ஆனால் அவளின் ஜெபத்தினாலே, ஞானஸ்நானம் என்ற வார்த்தை அவனுக்குள் ரீங்காரமிட்டுக் கொண்டேயிருந்தது. இதனால் அதைப்பற்றி அறிய ஆரம்பித்தான்; கர்த்தர் வெளிப்படுத்தினார். இருவரும் வெற்றியுள்ள கிறிஸ்தவர்களாய் ஜீவிக்கிறார்கள். இப்படித்தான் சகோதரிகள் மட்டுமல்ல எல்லாரும் உறுதியாய் விவேகமாய் இருந்தால் உலகத்தையே அசைக்க முடியும். ஆமென்.

❖ ❖ ❖

## 24

ஒரு தகப்பனும் சிறிய மகனும் தங்கள் கழுதையை ஓட்டிக்கொண்டு போனார்கள். போகிற வழியில் ஒரு ஆள் வந்து, "பாவம் இந்தச் சிறுவனை நடக்க வைத்து கூட்டிப் போகிறாயே நல்லா இருக்குதா?" என்றான். உடனே தகப்பன் தன் மகனை கழுதை மேல் வைத்து கொண்டு போனான். போகிற

வழியில் இன்னொருவன், “பாவம் இவ்வளவு வயதான மனுஷன் நீ ஏனய்யா நடக்கனும்? நீயும் கழுதையின் மேல் உட்கார்ந்து போகலாமல்லவா?” என்றான். கேட்ட தகப்பன் “சரி” என்று தானும் கழுதை மேல் ஏறிப் போனான். வழியிலே வேறொருவன், “ஏனய்யா ஜீவ காருண்யம் உனக்கு இல்லையா? பாவம்! வாயில்லா ஜீவன் மேலே இரண்டு பேரும் ஏறிப் போறீங்களே! அன்பில்லாத ஆட்கள் நீங்கள்” என்றான். தகப்பன் உடனே கீழே இறங்கி, அதன் கால்களை ஒரு பெரிய கம்பிலே கட்டி, முன்னும் பின்னுமாகத் தூக்கிக்கொண்டு போனார்கள். அங்கே ஒரு பாலம் வந்தது. கழுதை துள்ளியது, உடனே பக்கத்திலுள்ள தண்ணீருக்குள் விழுந்தது. அவர்களும் விழுந்தார்கள்.

இப்படித்தான் பல கிறிஸ்தவர்கள், யார் யாரோ தங்களுக்குச் சொல்லும் போதனையை கேட்டு, அதனை விசுவாசித்து, தங்களைத் தாங்களே இழந்து போகிறார்கள். பரிசுத்த ஆவியானவரின் வசனத்தை மட்டுமே விசுவாசிக்கும் எண்ணம் வருவதில்லை; வசனத்தோடு சிந்தித்து இணைந்து வாழ்வதில்லை. இப்படி வாழும் போதுதான் வசன வாழ்க்கை விசனமில்லாமல் இருக்கும். சிந்திப்பீர்; செயல்படுவீர். வெற்றி பெறுவீர்! கள்ள உபதேசம் ஒழியட்டும், கனிந்த வாழ்வு வளரட்டும்!

❖ ❖ ❖

## 25

ஒரு ஊரில் இரண்டு நண்பர்கள் இருந்தார்கள். ஒருவன் ஆத்திகன்; இன்னொருவன் நாத்திகன். இருவரும் ஒருநாள் பேசிக் கொண்டிருந்தபோது ஆத்திக நண்பன் சொன்னான்:- “நமது ஊர் சுடுகாட்டுக்குப் போகிற வழியிலே இருக்கிற வேப்பமரத்திலே, தினமும் இரவு 12 மணிக்கு பிசாசு வந்து ஆடுகிறது.” இதைக் கேட்ட மற்றவன், “பிசாசாவது, மண்ணாங்கட்டியாவது; அதெல்லாம் ஏமாற்று வேலை” என்றான். “இல்லையப்பா... உண்மைதான், நீ வேண்டுமானால் டெஸ்ட் பண்ணிப்பாரு” என்றான் ஆத்திக நண்பன். அதன்படி நாத்திக நண்பன் மறுநாள் இரவு 12 மணிக்கு அந்த வேப்பமரத்திற்குப் போய் ஒரு ஆணியை அதிலே அடித்து விட்டு வரவேண்டும் என்று முடிவாகியது. மறுநாள் இரவு நேரம் வந்தது. நாத்திக நண்பனோ தயாராய் இருந்தான். ஆனாலும் மனதிற்குள்ளே ஒரு பயம். ஒருவேளை பிசாசு இருந்துவிட்டால் ... ஆனாலும் தன்னைத் தேற்றிக்கொண்டு

வேப்பமரத்திடம் போனான். ஆணியை எடுத்து மரத்தின் மத்தியிலே அடித்தான். அடித்து முடித்துவிட்டு வேகமாய் திரும்பினான். திடிரென்று யாரோ தன்னை இழுப்பது போன்ற உணர்வு... தன்னுடைய வேஷ்டியை பிடித்து இழுப்பதுபோல் இருந்தது. அந்த இழுப்பிலிருந்து அவனால் மீண்டு வர முடியவில்லை. பயத்தினால் அந்த இடத்திலேயே மடிந்து போனான். பிசாசுதான் அவனை இழுத்து, போகவிடாமல் பண்ணியதா என்றால் இல்லை. பயத்தோடு அவன் ஆணி அடிக்கும்போது, தனது வேஷ்டியையும் சேர்த்து ஆணியடித்து விட்டான். இதனால் திரும்பும்போது வேஷ்டியை பிடித்து இழுப்பது போல எண்ணம். தேவபிள்ளையே! நீங்கள் என்ன தான் உங்களின் கிறிஸ்தவ வாழ்வில் உண்மையாய் இருந்தாலும், நீங்கள் பயந்த காரியம் உங்கள் வாழ்க்கையிலே நிச்சயம் நடக்கும். "Fear is the Reverse Gear of Faith" என்று ஒரு பிரசங்கியார் சொன்னார். பயம்தான் விசுவாச ஓட்டத்தின் எதிரி. பயம் இருந்தாலே வெற்றியை நோக்கி முன்னேறி ஓட முடியாது. அதனால்தான் தேவன் நமக்கு பயத்தின் ஆவியை கொடுக்காமல் தைரியத்தின ஆவியைக் கொடுத்திருக்கிறார்.

❖ ❖ ❖

## 26

ஒருநாள் ஒரு பெரிய பணக்காரர் வீட்டிலே திடீரென்று தீப்பிடித்து விட்டது. வீட்டிலுள்ள அனைவரும் மாண்டுப் போனார்கள். ஆனால் அந்த வீட்டின் சிறுவன் மட்டும் மேல் மாடியில் நின்று கொண்டு "ஐயோ! காப்பாற்றுங்கள்! காப்பாற்றுங்கள்!" என்று கத்திக் கொண்டிருந்தான். உற்றார், உறவினர், ஊரார் யாருமே நெருப்புக்குப் பக்கத்தில் போக முடியவில்லை. யாருமே அந்தச் சிறுவனை காப்பாற்ற முன் வரவில்லை. இந்தச் சூழ்நிலையில் எங்கிருந்தோ ஒரு நபர் அந்த இடத்திற்கு வந்தார். காப்பாற்றுங்கள் என்று கதறும் சிறுவன் சத்தம் அவர் காதில் விழுந்தது. காப்பாற்ற முற்படும்போது கூடியிருந்த ஜனங்கள், "ஐயரே! பயங்கரமான தீ! செத்துப் போவீர்கள்; போகவேண்டாம்" என்றனர். "செத்தாலும் பரவாயில்லை; அந்தச் சிறுவனை காப்பாற்ற வேண்டும்" என்று சொல்லி தீப்பிழம்புக்குள் புகுந்தார். கொஞ்ச நேரத்தில் தீப்புண்களுடன் அந்த சிறுவனை அணைத்தபடி கொண்டுவந்து போட்டுவிட்டு மயங்கி விழுந்தார். உடனே தீயணைப்பு, ஆம்புலன்ஸ் வந்தது. இவர்களை ஆஸ்பத்திரிக்கு கொண்டு போனார்கள். நாட்கள் கடந்தன. அந்தச் சிறுவனை வளர்க்க யாரும்

முன்வரவில்லை. அவனுக்கு சொத்துக்களோ ஏராளம். இந்தச் சொத்தை யார் பொறுப்பில் கொடுப்பது என்று ஊர்க்கூட்டம் போட்டார்கள். நிறைய பேர் நான் பொறுப்பேற்கிறேன் என்ற முன் வந்தனர். அந்த சிறு பையனிடம் அவனது விருப்பத்தை கேட்டனர். அவன் சொன்னான்:- தீப்பிடித்து எரியும் போது என்னைக் காப்பாற்ற யாரும் வரவில்லை; இன்றைக்கு என் சொத்தைப் பார்த்து ஏராளம் பேர் வருகிறார்கள். அன்றைக்கு தன் உயிரைப் பணயமாக வைத்து என்கைக் காப்பாற்றினாரே அந்த பெரியவரோடுதான் நான் இருப்பேன். அவர் தான் உயிர் கொடுத்தவர் என்றான். ஆம் சகோதரர்களே! இப்படியாய், அவமானம் நிந்தைகளை சகித்து, தன் உயிரையே நமக்காக கொடுத்த நம் ஆண்டவர் இயேசுவோடுதான் வாழ்வேன்; வளர்வேன் என்ற இந்த சிறுவனின் எண்ணம் நமக்கிருக்கிறதா? அப்படி இருப்பவர்கள்தான் விசுவாசிகள்; கிறிஸ்தவர்கள்; மறுபடியும் பிறந்தவர்கள்.

❖ ❖ ❖

## 27

நீதிபதி வீட்டிற்குள் நுழையும்போது ஒரு பயங்கரவாதி துப்பாக்கியுடன் அவரைக் குறிவைத்து "வீட்டில் உள்ள எல்லாரையும் உடனே கூப்பிடு" என்று பயமுறுத்தினான். அவர் செய்வதறியாது திகைத்து நின்றார். உடனே அவன் வீட்டிலுள்ள விலையுயர்ந்த பொருட்களை எடுத்துக் கொண்டு நீதிபதியை காயப்படுத்தி இரத்த வெள்ளத்தில் போட்டுவிட்டு வெளியேறினான். "போலீசுக்கு போன் செய்தால் திரும்ப வந்து உன் குடும்பத்தையே அழித்துவிடுவேன்" என்று மிரட்டிவிட்டு போனான். அவன் மறைந்ததும் நீதிபதியின் மனைவி போலீசையும், ஆம்புலன்சையும் அழைத்தார்கள். இதற்கிடையில் போலீசார் குற்றவாளியை பிடித்துவிட்டனர். மறுநாள் அவன் விலங்கிடப்பட்டு கோர்ட்டுக்கு கொண்டு வரப்பட்டான். நீதிபதியைப் பார்த்ததுமே அவன் கால்கள் தள்ளாடின; அவனால் நிற்க முடியவில்லை. எந்த நீதிபதியை அவன் காயப்படுத்தி, யாருடைய உடைமைகளை கொள்ளையிட்டானோ அவர்தான் அங்கே இவனுக்கு தண்டனை வழங்க தலையில் கட்டுடன் உட்கார்ந்திருந்தார். இந்தக் கதையை படிக்கும் சகோதரனே உனது பாவத்தால் காயப்பட்டு இரத்தம் சிந்தி கல்வாரியில் உனக்காய் ஜீவனை விட்ட இயேசு ஒருநாள் நியாயந்தீர்க்க நியாயாதிபதியாய் வரப்போகிறார். அதற்கு முன்னமே நீ இன்றே மன்னிப்பை அதே தேவனிடம்

பெற்றுக்கொள். அவர் அன்புள்ளவர்; இரக்கமுள்ளவர்; இன்றே இரட்சண்ய நாள். பரம்பரை மதம் இரட்சிக்காது; கிறிஸ்தவ பெயர் இரட்சிக்காது; பாரம்பரிய சபை இரட்சிக்காது; அல்லேலூயா!

❖ ❖ ❖

## 28

ஒரு சுரங்கத்தில் டேவிட் என்ற புதிதாக இரட்சிக்கப்பட்ட சகோதரன் வேலை பார்த்து வந்தான். அவன் இந்துவிலிருந்து வந்தவனாதலால் அங்குள்ள மற்றவர்கள் அவனைக் கிண்டலும் கேலியும் செய்து வந்தனர். நீ ஏற்றுக் கொண்ட இயேசு உனக்கு என்ன செய்யப்போகிறார் என்றெல்லாம் கேட்டனர். டேவிட் பொறுமையோடு கர்த்தரிடத்தில் முறையிட்டான். ஒருநாள் மதியம் சாப்பாட்டு நேரம். டேவிட் ஏழ்மையில் இருப்பதால் சப்பாத்தியை ஒரு துணியில் கட்டிக் கொண்டு வந்ததைப் பார்த்து அவர்கள் அதிகமதிகமாய் கேலி பண்ணினர். அப்போது ஒரு நாய் வந்து அந்த துணியோடு சப்பாத்தியை தூக்கிக் கொண்டு ஓடியது. உன் கர்த்தர் காப்பாற்றினாரா? சாப்பாடு இல்லாமல் நீ சாக வேண்டியது தான் என்று சொல்லி அவர்கள் வெறுப்பேற்றினர். இவனோ எப்படியாவது நாம் அந்த நாய் துணியை பிரிக்கும் முன்னேமேயே அதை பிடுங்கிட வேண்டும் என்று எண்ணி, கர்த்தரை நம்பி நாயின் பின்னாலே ஓடினான். அனைவரும் பார்த்து சிரித்தனர். நாய் சுரங்கத்தைவிட்டு கொஞ்ச தூரம் போய், துணியைப் பிரித்து சப்பாத்தியை சாப்பிட்டது. இதைக் கண்டதும் கண்ணீர் விட்டவனாய் பசியோடு சுரங்கத்தை நோக்கி வந்தான். வரும் வழியில் திடீரென்று ஒரு பயங்கர சத்தம். என்ன ஆச்சரியம்! சுரங்கம் இடிந்து விழுந்தது; அனைவரும் மாண்டு போனார்கள். டேவிட் நின்ற இடத்திலேயே தேவனை நோக்கி நன்றியோடு துதித்தான். அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய், தேவனிடத்தில் அன்பு கூறுகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கேதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம் என்ற வசனம் (ரோ.8:28) அவனுடைய உள்ளத்தில் ரீங்காரமிட்டுக் கொண்டே இருந்தது.

❖ ❖ ❖

## 29

ஒரு ஊரிலே ஒரு விஞ்ஞானி பெரிய கண்டுபிடிப்பு ஒன்றை கண்டுபிடித்ததினாலே, அது குறித்து அந்த நாட்டு விஞ்ஞானிகள் எல்லாரும் அறிந்து கொள்ள விரும்பி, அவரை பல இடங்களுக்கு அழைத்தார்கள். ஒவ்வொரு இடத்திற்கும் விஞ்ஞானி டிரைவரோடு போய் அதிக விளக்கம் கொடுத்தார். ஒருநாள் அவரை ஒரு ஊருக்கு அழைக்கும்போது, தனக்கு வந்த புகழ் டிரைவருக்கும் வர வேண்டும் என்ற அன்புள்ளத்தால் அந்த டிரைவரிடம், நீ நாளைக்கு விஞ்ஞானியாய் வா, நான் டிரைவராய் இருக்கிறேன் என்றார். இதைக் கேட்டதும் டிரைவர் பயந்து நடுங்கிவிட்டான். பயப்படாதே - நான் உன்னோடுதான் இருப்பேன் என்று சொல்லி, கூட்டத்திற்கு அழைத்துப் போனார். விஞ்ஞானி, டிரைவர் உடையில் மேடைக்கு முன்னால் உட்கார்ந்திருந்தார். மேடையில் டிரைவர், விஞ்ஞானி பேசுவது போல் ஆராய்ச்சிக் கருத்துக்களை சொன்னார். முடிவிலே அந்த ஊரிலே உள்ள ஒரு பெரிய விஞ்ஞானி சந்தேகக் கேள்வி ஒன்றைக் கேட்டார். இந்தக் கேள்விக்கு விஞ்ஞானியாய் இருந்த டிரைவருக்கு பதில் சொல்லத் தெரியவில்லை. உடனே அவர், "இதென்ன கேள்வி? இதற்கு நானல்ல, என்னுடைய டிரைவரே பதில் சொல்லுவார்" என்று சொல்லி உண்மை விஞ்ஞானியை அழைத்து பதில் சொல்ல வைத்தார். இப்படித்தான் தேவபிள்ளையே - தகுதியில்லாத நம்மை தேவன் தம்முடைய பிள்ளையாக்கி நீதிமானாக்கி நடத்திச் செல்கிறார். அப்படிப்பட்ட ஆவிக்குரிய வாழ்க்கையிலே, நம்மோடு நம்மேல் இருக்கும் தேவன், பெலன் தந்து வளம் தந்து கோணலானவைகளை செம்மையாக்கி வெற்றிப்பாதையிலே நடத்திச் செல்கிறார். அல்லேலூயா!

❖ ❖ ❖

## 30

எப்போதுமே ராஜா இரவிலே மாறுவேடத்தில், சிப்பாய்கள் என்ன செய்கிறார்கள் என்று பார்க்க வருவார். எல்லா விளக்குகளும் அப்போது அணைக்கப்பட்டிருக்கும். ஒருநாள் நள்ளிரவில் அவர் வரும்போது ஒரு இடத்தில் மாத்திரம் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. உடனே ராஜா அதை நோக்கி போனார். ஒரு ராணுவ அதிகாரி, துப்பாக்கி, ஒரு கத்தைபணம், கீழே கிடக்கும் பேனா, ஆகியவற்றை கண்டார். அந்த இராணுவ தளபதி

தலைசாய்த்து தூக்கத்திலிருந்தான். அவனருகில் எழுதியிருந்த பேப்பரை எடுத்துப் படித்தார். அவன் சூதாட்டம் போன்ற இடங்களில் ஏற்பட்ட கடனைத் தீர்க்க அரசாங்க ராணுவ நிதியில் கையாடியிருக்கிறான். கணக்குப் பார்க்கும் போது நிறைய பணம் பற்றாக்குறையாக இருந்தது. இவ்வளவு பணத்தை எப்படி சமாளிப்பது என்று அதிகாரி யோசித்தான். "எனக்குள்ள கடனைத் தீர்த்து என்னை விடுவிப்பவர் யார்?" என்று கேட்டு பேப்பரில் எழுதியிருந்தது. அவமானம் தாங்காமல் தற்கொலை செய்து கொள்ள தளபதி எண்ணினான். அதே நேரத்தில் தன் குடும்பத்தைப்பற்றி யோசித்தான். கண் கலங்கி, கவலையிலேயே உறங்கிவிட்டான். இதைப்படித்த உடனே ராஜாவுக்கு மிகவும் கோபம். இவனை ராணுவ கோர்ட்டில் ஏற்றி தகுந்த தண்டனை கொடுக்க எண்ணினார் ராஜா. திடீரென்று ராஜாவுக்கு இவன்மேல் இரக்கம் வந்தது. உடனே அந்த சீட்டில், "இவ்வளவு கடனையும் தீர்ப்பவர் ராஜாவாகிய நான்" என்று கையெழுத்து போட்டுவிட்டு போய்விட்டார். விழித்தெழுந்த தளபதி ராஜாவின் கையெழுத்தைப் பார்த்தவுடனே ஒன்றும் செய்வதறியாமல் நின்றான். காலையிலே தளபதியை நோக்கி பணம் வந்தது. கடன் பிரச்சனை தீர்ந்தது. தளபதி, ராஜாவை சந்தித்து மன்னிப்பு பெற்றான்.

இப்படித்தான் தேவபிள்ளையே - நம் பிரச்சனைகளை தீர்ப்பது யாரென்று எண்ணி எண்ணி கலங்குகிறாயா? உன் பிரச்சனைகளை நான் தீர்ப்பேனென்று 2000 வருஷங்களுக்கு முன்பே இயேசு இந்த ராஜாவைப் போல கையெழுத்து இட்டுவிட்டார். விசுவாசித்துப்பார், உன் பிரச்சனைகள் தானாய் தீரும்; தேவ தொடர்போடு செழுமையாய் வாழப் போகிறாய். அல்லேலூயா!

❖ ❖ ❖

## 31

ஒரு காட்டில் ஒரு முனிவர் இருந்தார். அவரைப் பார்க்க வந்த சுண்டெலி "ஐயா! எனக்கு பூனையைக் கண்டால் பயமாயிருக்கிறது; என்னைப் பூனையாக மாற்றுங்கள்" என்றது. உடனே முனிவர் பூனையாக மாற்றினார். கொஞ்சநாள் கழித்து அந்த பூனை வந்து, "ஐயா எனக்கு நாயைக் கண்டால் பயமாயிருக்கிறது; என்னை நாயாக மாற்றுங்கள்" என்றது. உடனே முனிவர் நாயாக மாற்றினார். கொஞ்சநாள் கழித்து அந்த நாய் வந்து, "ஐயா! எனக்கு புலியைக் கண்டால் பயமாயிருக்கிறது; என்னை புலியாக மாற்றுங்கள்" என்றது. முனிவரும் புலியாக மாற்றினார். கொஞ்ச நாள்

கழித்து அந்த புலி, "ஐயா! காட்டிலுள்ள வேடன் என்னை கொல்லப் பார்க்கிறான்; என்னை மனிதனாக மாற்றுங்கள்" என்றது. அதைக் கேட்ட முனிவர் இரக்கத்தோடு மனிதனாக மாற்றினார். மனிதனாக மாறிய அந்த எலி, கொஞ்ச நாள் கழித்து, "ஐயா! உலகிலுள்ள மனிதர்களைக் கண்டாலே எனக்கு பயமாக இருக்கிறது; எனவே என்னை...." என்று சொல்ல ஆரம்பிக்கும் போதே முனிவர் கோபம் கொண்டு, "சுண்டெலியே! நீ என்ன மாதிரி மாறினாலும் உனக்கிருந்த பழைய பயம் போகவில்லை; எனவே உன்னை என்னவாக மாற்றினாலும் பிரயோஜனமில்லை; நீ பழையபடி சுண்டெலியாகவே இரு" என்று மீண்டும் சுண்டெலியாக்கி விட்டார்.

இதை வாசிக்கும் தேவபிள்ளையே! ரோ.3:23, 24;1 கொரி.6:11ன் படி தேவன் உன்னை பரிசுத்தவானாய் நீதிமானாய் ஆக்கினாலும், உனது பாவ மனுஷன் கொஞ்சம் கொஞ்சமாய் வேத வசனத்தினால் இன்னும் மாறாமல் போனால், நீ பாவியாகவே இருப்பாய் அல்லவா? சிந்தித்து செயல்படுங்கள்.

❖ ❖ ❖

## 32

ஒரு ராஜாவுக்குக் கீழே, பணிபுரியும் ஒரு சேவகன் தினந்தோறும் வருகிறவர்கள் போகிறவர்கள் எல்லாரிடமும் லஞ்சம் வாங்குவான். இந்த விஷயம் ராஜாவின் காதுக்கு எட்டியது. அன்பு உள்ளம் கொண்ட ராஜா, அவனை டிஸ்மிஸ் செய்யாமல், அவன் லஞ்சமே வாங்க முடியாத ஒரு இடத்தில் பணிசெய்ய அமர்த்த நினைத்தான். அதன்படியே, அவனைக் கடற்கரைக்குக் கூட்டிக் கொண்டுபோய், இங்கே அமர்ந்து தினந்தோறும் கடலில் எத்தனை அலைகள் எழும்புகின்றன என்று எண்ணி ஒப்புவிக்க வேண்டும் என்று கட்டளையிட்டார். இதன் மூலமாய் அவன் மனமாற்றம் அடைவான் என்றும் நம்பினார். கடற்கரையிலே அமர்ந்தவன் அலைகளை எண்ணினாலும், தன் உள்ளமெல்லாம் எப்படி லஞ்சம் வாங்குவது என்றே யோசித்துக் கொண்டிருந்தது. திடீரென்று அவனுக்கு ஒரு எண்ணம் வந்தது. அந்த வழியாய் படகிலே மீன்பிடிக்கப் போவோரை நிறுத்தினான். ராஜாவின் சேவகன் என்பதால் அவர்கள் மதித்து நின்றார்கள். நான் ராஜா சொன்னபடி எழும்புகிற அலைகளை எண்ண வந்திருக்கிறேன். நீங்களெல்லாம் குறுக்கே போனால் என்னால் எண்ண முடியாது. அதனால் ராஜா உங்கள் மீதும் கோபப்படுவார். எனவே யாரும் குறுக்கே போக கூடாது என்றான். எவ்வளவு நாள் தான் மீன்பிடிக்க குறுக்கே போகாமல் இருக்கமுடியும்? அவர்கள்

கவலையோடு நின்றார்கள். அதைப் பார்த்த சேவகன், நீங்கள் குறுக்கே, மீன்பிடிக்க போக வேண்டுமானால் எனக்கு கொடுக்க வேண்டிய கிம்பளத்தை கொடுத்து விடுங்கள்; நீங்கள் பேகாலாம் என்றான். அவர்களும் ஒத்துக்கொண்டு கொடுத்தார்கள்.

இதை வாசிக்கும் தேவபிள்ளையே! இடம் மாறினாலும் ஒருவனின் இதயம் மாறவேண்டும்; எண்ணமும் மாற வேண்டும். கிறிஸ்தவனாய் இரட்சிக்கப்பட்டாலும், அவன் மனம் மாறவில்லை என்றால் பிரயோஜனம் என்ன? இன்றைக்கு பல கிறிஸ்தவர்கள் பெயருக்காகவும், பெருமைக்காகவும் இரட்சிக்கப்பட்ட கிறிஸ்தவர்கள் என்று சொல்கிறார்கள். ஆனால் அவர்கள் இதயம் - ஆவி மாறவில்லை. பழையவைகள் ஒழியவில்லை; மனமாற்றம் இல்லை. இவர்களும் புறஜாதியாரும் ஒன்றே - அறிந்த பின்னும் இப்படி இருப்பது அவர்களுக்கும் கீழ்நிலைதான்.

❖ ❖ ❖

## 33

ஒரு ராஜா, பறவைகளின் ராஜாவாகிய ராஜாளியை தன் அரண்மனையிலே அன்போடு வளர்த்தார். அந்தப் பறவையை உயிருக்கு உயிராக நேசித்தார். அந்த ராஜாவுக்கு பிறந்தநாள் வந்தது, விருந்து ஏற்பாடுகள் தடபுடலாய் நடந்தன. பெரிய பெரிய செல்வந்தர், வீரர்கள் மத்தியிலே ராஜாவும் ராஜாளியோடு அமர்ந்திருந்தார். முதலில் எல்லோருக்கும் மதுபானம் கொடுக்கப்பட்டது. ராஜா எடுத்துக் குடிக்கும்போது ராஜாளி ஓடிவந்து தட்டிவிட்டது. ராஜாவுக்கு கோபம்தான்; ஆனாலும் அடக்கிக் கொண்டார். மறுமுறை அவருக்கு பானம் வைக்கப்பட்டது. அதையும் அவர் குடிக்க ஆரம்பிக்கும்போது, ராஜாளி மறுபடியும் தட்டிவிட்டது. பயங்கர கோபமடைந்த ராஜா, வேலைக்காரனைக் கூப்பிட்டு, தான் உயிருக்குயிராய் வளர்த்த ராஜாளியை கொல்லும்படி உத்தரவிட்டான். சில நிமிடங்களில் ராஜாவின் ஒற்றன் ஓடிவந்து, "ராஜாவே! உங்களை கொல்ல மதுபானத்தில் விஷம் வைத்திருக்கிறார்கள்; அதை அருந்த வேண்டாம்" என்று சொன்னான். இதைக் கேட்ட ராஜா, உடனடியாக ராஜாளியை கொல்ல கொண்டுபோன கொலைக்களம் நோக்கி விரைந்தான். ராஜாளி கொல்லப்பட்டு துடிதுடித்துக் கிடப்பதை பார்த்து மனங்கலங்கினான். இப்படித்தான் சகோதரனே - நம் வாழ்க்கையில் நம் பார்வைக்கு சில காரியங்கள் நன்மையாய் தோன்றலாம்; ஆனால் தேவன் அதை தடுத்து நிறுத்தும் போது, அந்த காரியம் நடக்காமல்

போகும்போது, பிசாசுதான் இதைத் தடுத்தான் என்று சொல்லி, தேவனை பிசாசுக்கு சமமாக்கி, மோசே மறுபடியும் கற்பாறையை அடித்ததுபோல் மறுபடியும் தேவனை சிலுவையிலே மரிக்க வைக்கிறோம். மனுஷனுக்கு செழுமையாய் சில வழிகள் தோன்றும்; ஆனால் அவைகளின்படி போனால் மரணமே. தேவசித்தத்திற்கு ஒப்புக்கொடுப்போம். எல்லாம் நன்மைக் கேதுவாய் நடக்கும்.

❖ ❖ ❖

## 34

கீதா மிகவும் அன்போடு ஒரு நாய்க்குட்டியை வளர்த்தாள். ஒருநாள் அந்த நாய் கீதாவின் அருகில் அமர்ந்து கீதாவை நோக்கி குரைக்கிறது; ஏதோ வேண்டும் போல் அலைகிறது. கீதாவால் நாய்க்கு என்ன தேவை என்று கண்டுபிடிக்க முடியவில்லை. ஆனாலும் நாய்க்குரிய பிஸ்கட்டை எடுத்துக் கொடுத்தாள். நாய் சாப்பிடாமல் குரைத்துக் கொண்டே இருந்தது. என்ன என்று புரியாத கீதா நாய்க்கு எலும்புத் துண்டுகளைப் போட்டாள். அதையும் சாப்பிடாமல் நாய் அங்குமிங்கும் அலைந்து கொண்டிருந்தது. சமையலறைக்குள்ளே போய் Sinkல் உள்ள தண்ணீர் குழாயை நோக்கிப் போன நாயைப் பார்த்து, நாய்க்கு தாகத்திற்கு தண்ணீர் வேண்டும் என்று அறிந்தாள். தன்னுடைய வாட்டர் பேக்கிலே தண்ணீரை நிரப்பி நாய்க்கு கொடுத்தாள். நாய்க்கு மிகுந்த மகிழ்ச்சி. இந்த தண்ணீர், நாயின் தாகத்தை தீர்த்தது. ஆனால் நம்முடைய தேவைகளை முழுவதும் சொல்ல முடியாவிட்டாலும், தேவனே எல்லாவற்றையும் அறிந்து ஜீவத்தண்ணீரை கொடுக்கிறார். இயேசுகிறிஸ்துவின் ஜீவத்தண்ணிரால் நம் தாகமெல்லாம் தீரும். தேவைகளெல்லாம் சந்திக்கப்படும். மறுபடியும் தாகம் வராது. அவர் நம் உள்ளளத்தின் ஆழத்தை உணர்ந்து உதவுபவர்; இதைத்தான் "நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கோ ஒருக்காலும் தாகம் உண்டாகாது" என்று இயேசு சொன்னார் (யோ.4:14). இதைப் படிக்கும் தேவபிள்ளையே! உன் விருப்பமும் வேண்டுதலும் நிறைவேற வேண்டுமானால் இயேசுவின் வார்த்தையை விசுவாசித்து ஏற்றுக்கொள். வெற்றி உனதே!

❖ ❖ ❖

# 35

ஜனநாயகப் புரட்சி மேலை நாடுகள் ஒன்றில் நடந்துகொண்டிருக்கும் போது; புரட்சி அமைப்பு ஒன்று தீவிரமாக செயல்பட்டது. தங்கள் கருத்தினை வலியுறுத்த திடீரென்று ஒரு ஊருக்குள் புகுந்து அங்குள்ள வீடுகளை தீக்கிரையாக்கி அட்டகாசம் செய்தனர். இந்த அக்கிரமச் செயலை அடக்க நகர மக்கள் ஒன்று சேர்ந்து தங்களுக்குள் பாதுகாப்பு அமைப்புகளை துவக்கி, போராட முயன்றனர். அரசாங்கம் அனுமதியும், ஆயுதமும் வழங்கியது. ஒருநாள் இந்த தீவிரவாத அமைப்பை சேர்ந்த ஒரு குழு பிடிபட்டது. அவர்களின் கண்களைக்கட்டி, நகரின் நடுவில் வெட்டப்பட்ட குழியில் வரிசையாக நிறுத்தி, சுட்டுக்கொல்ல வீரர்கள் குறிபார்த்தனர். அப்போது "நிறுத்துங்கள் நிறுத்துங்கள்" என்று ஒரு சத்தம் கேட்டது. ஒரு வாலிபன் சத்தமிட்டு கொண்டே ஓடிவந்து அங்கிருந்த அதிகாரியிடம், ஒரு குற்றவாளியைக் காட்டி "இவனை சுடவேண்டாம்; விட்டுவிடுங்கள். அவனுக்கு மனைவியும் 4 பிள்ளைகளும் உண்டு. அவர்களுக்காக அவன் உயிர் வாழவேண்டும். நானும் அந்த தீவிரவாத இயக்கத்தை சார்ந்தவன்; அவனுக்குப் பதிலாக என்னை நிறுத்திக் கொல்லுங்கள்" என்றான். நீண்ட ஆலோசனைக்குப் பிறகு அவனது வேண்டுகோள் ஏற்கப்பட்டது. மரண தண்டனை பெற இருந்தவனின் கட்டுகளை அவிழ்த்துவிட்டு விடுதலை பண்ணினார்கள். அந்த இடத்தில் இந்த வாலிபனை நிறுத்தி சுட்டுக் கொன்றார்கள். விடுதலையான மனிதன் தீவிரவாத இயக்கத்தினர் சுட்டுக் கொல்லப்பட்ட இடத்திற்கு மறைவாக ஒருநாள் வந்து, குழியைத் தோண்டி, தனக்காய் மரித்தவனின் உடலை எடுத்து குதிரை மீதேற்றி, தன் இடத்திற்கு கொண்டுபோய் அவனை முறையாய் அடக்கம் பண்ணி, அந்த கல்லறையின் மீது, "எனக்காய் மரித்தவன், என் இடத்தில் நின்றவன், இங்கே உறங்குகிறான்" என்று எழுதினான்.

தேவனுடைய பிள்ளையே! கிறிஸ்துவின் சிலுவை மரணத்தில் இதைக் காணலாம். அவர் நமது இடத்தில் நின்றார்; நமது பாவத்திற்காய் நமக்கு வரும் மரணத்தை அவர் ஏற்றுக் கொண்டார்; நமது பாவத்தை சுமந்தார். இதுதான் அவரின் தேவன்பு, இந்த அன்புதான் நம்மில் ஊற்றப்பட்டிருக்க வேண்டும் என்று தேவன் புதிய ஏற்பாட்டுப பிரமாணமாய் நமக்குத் தந்திருக்கிறார். அல்லேலூயா!

❖ ❖ ❖

# 36

ஒரு ஊரில் ஒரு பெரிய பணக்காரர் இருந்தார். அந்த ஊர் மக்கள் பொருளாதாரத்தில் நலிவுற்றுக் கிடந்தனர். அவர்களுக்கென இவர் ஒரு திட்டம் தீட்டினார். "நம்புகிறவர்களுக்கு மட்டும்" என்ற தலைப்பிட்டு, இன்ன தேதியில் காலை 10-12 மணிக்குள் தங்களின் கடன் பத்திரத்தோடும், பிரச்சினை விளக்கத்தோடும் பணக்காரரின் அலுவலகம் வந்தால், நிச்சயம் விடுதலை அளிக்கப்படும் என்று சுவரொட்டியை போட்டார். மக்கள் ஆச்சரியமாய் அதைப் பார்த்தனர். இந்தப் பணக்காரருக்கு பைத்தியமோ என்று கிண்டல் பண்ணினர். அறிவித்த அந்த நாளும் வந்தது. பலர் இவரின் ஆபீசின் முன் கூடியிருந்து பலவாறாக பேசிக்கொண்டிருந்தனர். பணக்காரர் வந்து ஆபீஸ் உள்ளே போனார். எல்லாரும் இரு மனமுள்ளவர்களாய் யோசித்துக் கொண்டேயிருந்தனர். முதலில் போனால் முட்டாள் என்ற பட்டத்தோடு வருவோமோ என்று எண்ணி, யாராவது போகட்டும், பிறகு போகலாம் என காத்திருந்தனர். ஒரு வயதான தம்பதியர் கையில் ஒரு கட்டு கடன் பத்திரங்களோடு வந்தனர். "நீங்கள் ஏன் போகவில்லை" என்று அவர்கள் கேட்டதற்கு, "இதெல்லாம் பணக்காரரின் கேலிக்கூத்து; நாங்கள் உள்ளே போய் வெட்கப்பட்டு வர விரும்பவில்லை; நீங்கள் வேண்டுமானால் போங்கள், ஒருவேளை உங்கள் கடன் தீர்க்கப்பட்டால் நாங்கள் வருகிறோம்." என்றனர். தம்பதியர் நம்பிக்கையோடு உள்ளே போயினர். அறிவித்தபடி அவர்கள் கடன் முழுவதும் தீர்க்கப்பட்டது. தம்பதியர் கண்ணீரோடு நன்றி கூறினர். தம்பதியர் வெளியே உள்ளவர்களுக்கு சொல்ல முயன்றபோது, "நீங்கள் எப்படி நம்பிக்கையோடு வந்தீர்களோ, அப்படியே அவர்களும் வரலாமே" என்றார் செல்வந்தர். அதற்குள் மணி 12 அடித்தது. செல்வந்தர் வெளியே வந்து காரில் ஏறினார். அவர் தந்த செக்கோடு வெளியே வந்த தம்பதியரை பார்த்த மக்கள், அவரின் காரை மறித்து தங்களின் சுமைகளை தீர்க்க வேண்டினர். "நான் சொன்ன நேரம் முடிந்தது; என் வார்த்தையை நம்பி வந்தவர்களுக்கு நான் சொன்னதை செய்ய தவறுவதில்லை; என் வார்த்தையை நம்பாதது உங்கள் தவறன்றோ" என்று சொல்லிவிட்டு காரில் ஏறிப்போய்விட்டார். தேவபிள்ளையே! இந்தக் கிருபையின் நாட்களிலே, தேவனின் ஒவ்வொரு வார்த்தைகளையும் விசுவாசித்து செயல்பட ஆரம்பி; அவர் சொன்னதை செய்பவர்; செய்வதை சொல்பவர். உன் வாழ்க்கை நிச்சயம் வெற்றி வாழ்க்கையாகும். கிருபையின் காலம் முடியப்போகிறது; காலத்தை பயன்படுத்திக் கொள்.

❖ ❖ ❖

## 37

ஒரு ஊரிலே "விறகு வெட்டி" ஒருவன் ஆற்றங்கரைக்கு அருகிலே மரத்தை வெட்டினான். அவன் வெட்டிக் கொண்டிருக்கும் போது திடீரென்று அவனது கோடாரி கைதவறி ஆற்றுத் தண்ணீரில் விழுந்துவிட்டது. அவனுக்கு நீச்சல் தெரியாததால் அவனால் நீருக்குள் குதித்து எடுக்க முடியவில்லை. தன் பிழைப்புக்கென்று இருந்த கோடாரி போய்விட்டதே என்று மிகவும் வருந்தினான். அவன் தெய்வபக்தி உள்ளவனாதலால் தேவனை நோக்கி அபயமிட்டான். உடனே தேவன் அவனுக்கு முன்னே தோன்றி "அழாதே! நானே தண்ணீருக்குள் மூழ்கி எடுத்து வருகிறேன்" என்று சொல்லி நீருக்குள் மூழ்கினார். ஒரு தங்க கோடாரியை எடுத்துக்காட்டி, இது உன்னுடையதா? என்றார். இல்லை... இல்லை... என்றான். மறுபடியும் அவர் நீருக்குள் மூழ்கி, ஒரு வெள்ளிக் கோடாரியைக் காட்டி, "இது உன்னுடையதா?" என்றார். அவனோ, சத்தமாய் "இதுவல்ல, என்னுடைய கோடாரி மரக்கைப்பிடி போட்ட இரும்புக் கோடாரி" என்றான். மறுபடியும் தேவன் மூழ்கி, இரும்பு கோடாரியை எடுத்து வந்து காட்டினார். "இதுதான் என்னுடையது" என்று சத்தமிட்டு சொன்னான். அவனின் ஆசையில்லாத உண்மை உள்ளத்தை தேவன் அறிந்து, அவர் எடுத்த தங்கம், வெள்ளி கோடாரியையும் சேர்த்து அவனுக்குத் தந்தார்.

சாலமோன் அப்படித்தானே! அவன் உலக ஆசை ஏதுமின்றி ஞானத்தை மட்டுமே கேட்டபடியால், அவனுக்கு ஞானத்தோடு ஐஸ்வரியத்தையும், சம்பத்தையும் தேவன் தந்தார் (11 நாளா.1:7-12). பொருளாசை, ஒரு விக்கிரக ஆராதனை (கொலோ.3:5; எபே.5:5) பண ஆசை எல்லா தீமைக்கும் வேர் (1 தீமோ.6:10). எனவே இந்த ஆசைகளை விட்டு, உண்மையாய் தேவ வார்த்தையோடு அவரை நம்பி ஜீவிக்கிறவன் எவனோ, அவன் இம்மை மற்றும் மறுமைக்குரிய ஆசீர்வாதங்களை நிச்சயம் பெறுவான். ஆத்மா வாழ்வது போல் எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருப்பான். (மாற்.10:30; 111 யோ.2)

❖ ❖ ❖

## 38

ஒரு ஊரிலே நல்லா நகை தட்டுகளோடு திருமணம் நடந்தது; மறுவழிக்கு மாப்பிள்ளையும் பெண்ணும் பிறந்த வீட்டிற்கு போகிறார்கள். ஒரு

பஸ் ஸ்டாண்டில் பெண்ணை நிறுத்திவிட்டு, மாப்பிள்ளை சிறுநீர் கழிக்க போய்விட்டார். அப்பொழுது பெண்ணின் கழுத்திலிருந்து நகையை திருடன் ஒருவன் அறுத்துக் கொண்டு ஓடிவிட்டான். குய்யோ முறையோ என்று சத்தம். மக்களெல்லாம் கூடிவிட்டனர். பெண், தலையில் அடித்துக் கொண்டு அழுகிறாள். ஒரு ஐந்து நிமிடத்திற்குள் ஒருவன் ஓடிவந்து மாப்பிள்ளையிடம், "நீயெல்லாம் ஒரு மாப்பிள்ளை; உனக்கெல்லாம் ஒரு பொண்ணு, இங்கே பாரு உன் மாமனார், உனக்கு போட்ட நகையை; எல்லாம் கோல்டு கவரிங்; நல்லா ஏமாத்திட்டான் உன் மாமா" என்று சொல்லிக் கொண்டே, நகைகளை வீசி எறிந்து விட்டு ஓடிவிட்டான். மாப்பிள்ளைக்கு பயங்கர கோபம்; நேரே மாமனார் வீட்டிற்கு போனான். கன்னாபின்னா என்று மாமனாரைத் திட்டினான். "இந்தா உன் மகளை நீயே வச்சுக்க, எனக்கு வேண்டாம்" என்று சொல்லிவிட்டு வந்துவிட்டான். விஷயம் கோர்ட்டு வரை போயிற்று. முடிவு டைவர்ஸ். இப்படித்தான் அந்த திருடனைப் போல, பிசாசு நல்லது போல செய்வான்; சொல்வான்; முடிவோ நித்திய அழிவு. பிசாசு திருடவும் கொல்லவும் அழிக்கவும் வந்தான். அநீதியான உலகக் காரியங்களாலே ஏமாற்றுவான்.

## 39

ஒரு போலீஸ்காரர், ரௌடி ஒருவனை பிடிக்கப் போகிறார். ரௌடி டீக்கடையில் நிற்பதைக் கண்டு, போலீஸ்காரர் அவனைப் பிடித்து, போலீஸ் ஸ்டேஷனுக்கு கூட்டி போகிறார். போகிற வழியில் மழை வருவது போலிருக்கிறது. "ஐயா போலீஸ்காரரே உங்களுக்கு மழை ஒத்துக் கொள்ளாதே! என் வீடு பக்கத்து தெருதான்; நீங்கள் இங்கேயே இருங்கள்; நான் போய் என் குடையை கொண்டு வருகின்றேன்" என்று ரௌடி சொன்னான். "என்னுடைய உடம்பின் மேல் எவ்வளவு அக்கறை" என்று போலீஸ்காரர் எண்ணி, ரௌடியை போய் குடை கொண்டு வரச் சொன்னான். நேரம் ஆகிக் கொண்டே இருந்தது. போனவன் போனவன்தான் வரவே இல்லை. அன்றைக்கு இன்ஸ்பெக்டர், போலீஸ்காரரைத் திட்டி, நாளைக்கு ரௌடியை பிடித்து வராவிட்டால் உன்னை தண்ணியில்லாத காட்டிற்கு மாற்றிவிடுவேன் என்று சொன்னார்.

மறுநாள் அதே போல் அந்த ரௌடி டீக்கடையில் நின்றான். போலீஸ் அவனைக் கண்டுபிடித்தான். போலீஸ் ஸ்டேஷன் போகிற வழியில் மழை வருவது போல் இருந்தது. அன்றைக்கு அந்த ரௌடி, "ஐயா! இன்று கண்டிப்பாய் நான் போய் குடை கொண்டு வருவேன்" என்றான். அவன்

சொன்னதை நம்பாத போலீஸ்காரர், "இன்றைக்கு நான் போய் எடுத்து வருகிறேன்" என்று சொல்லிவிட்டு போய் விட்டார். வந்து பார்க்கும் போது ரௌடியைக் காணவில்லை. ரௌடி ஓடிப்போய் விட்டான். இப்படித்தான் பிசாசு எல்லாரையும் நல்லவன் போல ஏமாற்றி கெடுப்பான்.

## 40

ஒரு நாள் கொளத்தூர் பிசாசும், பெரியார் நகர் பிசாசும் ஓரிடத்திலே சந்தித்தன. பெரியார் நகர் பிசாசு சந்தோசமாய் படுத்திருந்தது. அதைப் பார்த்த கொளத்தூர் பிசாசு "என்னப்பா நீ! உன் ஊரிலே ஒரு கிறிஸ்தவ மீட்டிங் நடக்குதே - அங்கே போயி மீட்டிங்குக்கு வந்தவங்களுக்கெல்லாம் ஒரு தூக்கம், மயக்கம், தலைவலி ஏதாவது உண்டாக்கக் கூடாதா?" என்று கேட்டான். அதைக் கேட்ட பெரியார் நகர் பிசாசு, "அட போப்பா நீ ஒண்ணு - அந்த மீட்டிங்லே வந்தவுங்கெல்லாம் நம்ம ஆளு."

"ஓகோ.... அப்படியா.... அதுசரி.... அங்கே பேசுறானே ஒருத்தன்; அவனுக்காவது ஏதாவது தொல்லை கொடுத்தா என்ன?" என்றான் கொளத்தூர் பிசாசு. "அங்கே கேட்கிற ஆளும் நம்ம ஆளு... பேசுற ஆளும் நம்ம ஆளு... அதான் நான் நிம்மதியாய் படுத்திருக்கேன்" என்றான் பெரியார் நகர் பிசாசு.

இப்படித்தான் பலர் பிசாசுக்கு ஜாலியை உண்டாக்கி, தங்களை அறியாமலே பிசாசின் பிள்ளைகளாகி விடுகிறார்கள். இப்படி ஆக்குவது தான் பிசாசுக்கு கைவந்த கலை.

❖ ❖ ❖

## 41

ஒரு வீட்டிற்கு இரண்டு சாமியார்கள் வந்தனர். வீட்டுக்காரன் அவர்களை வரவேற்று உட்கார வைத்தார். அவர்களுக்கு விருந்து தயாராகிக் கொண்டு இருந்த போது, அந்த சாமியார்களை, பக்கத்திலுள்ள ஆற்றில் குளித்துவிட்டு வாருங்கள் என்று வீட்டுக்காரர் சொன்னார். முதலில் ஒரு சாமியார் சென்றார், இன்னொரு சாமியாரைப் பார்த்து "ஐயா! அந்த சாமியார் எப்படிங்க" என்று வீட்டுக்காரர் கேட்டார். "அவன் கிடக்கிறான் கழுதை" என்று பதிலளித்தார். என்ன இப்படி சொல்கின்றாரே என்று வீட்டுக்காரர் மிகவும் ஆச்சரியப்பட்டார். அப்போது குளிக்கப் போனவர் வந்துவிட்டார். உடனே

மற்றொருவர் குளிக்கப் போனார். இவரிடம் கேட்கலாமென்று. "ஐயா குளிக்கப் போன சாமியார் எப்படிங்க?" என்று வீட்டுக்காரர் கேட்டார். "அவன் கிடக்கிறான் மாடு" என்று பதிலளித்தார். "என்னடா இது! ஒன்று கழுதை, இன்னொன்று மாடு" என்று யோசித்துக் கொண்டே சமையலறைக்குப் போனார். இரண்டாவது சாமியாரும் குளித்து வந்து விட்டார். இரு சாமியாரும் சாப்பிட உட்காருகிறார்கள். ஒருவருக்கு தவிடும், ஒருவருக்கு வைக்கோலும் பரிமாறப்படுகிறது. என்ன ஆச்சரியம் "நீங்கள் சொல்லியபடியே செய்தேன்" என்றான் வீட்டுக்காரன். "நீ சொல்லுகிறபடியே உனக்கு ஆகும்" என்பது உண்மையான சத்தியமே!

❖ ❖ ❖

## 42

ஒரு பிரசங்கியார் ஒரு ஊரிலே பிரசங்கம் பண்ணிக் கொண்டிருந்தார். அவருக்கு சமைத்துக் கொடுப்பவர் தாவூது என்கிற முஸ்லீம். ஒரு நாள் பிரசங்கியார் தாவூதைக் கூப்பிட்டு, "நீ இயேசுவை ஏற்றுக்கொள்" என்றார். அவன் சரி என்றான். உடனே பிரசங்கியார் மிகுந்த சந்தோசமடைந்து கொஞ்சம் தண்ணீர் கொண்டு வரச்சொல்லி, அவன் தலையிலே தெளித்து ஞானஸ்நானம் கொடுத்து "இன்று முதல் உன் பெயர் தாவூது அல்ல; தாவீது" என்றார். "ஐயரே! இனி நான் எப்படி நடக்க வேண்டும்" என்று கேட்டான். "நாளை முதல் காலைதோறும் என்னிடம் வந்து கேட்டு, நான் சொல்லுகிறபடியே செய்" என்றார் பிரசங்கியார். இரண்டு நாட்கள் அப்படியே நடந்தான் அவன். மூன்றாம் நாளிலிருந்து பிரசங்கியாருக்கு லெந்து நாட்கள் வந்துவிட்டன. அவர் சொன்னார். "தாவீது! இன்று முதல் நீ கறி சமைக்கக் கூடாது." அவனும் சரி என்றான்.

அன்று மாலை பிரசங்கம் முடிந்துவிட்டு ஓய்வறைக்கு வரும் போது வீட்டிலே கறிக்குழம்பு வாசனை பயங்கரமாய் இருந்தது. பிரசங்கியாருக்கு கோபம் வந்தது. தாவீதை கூப்பிட்டார், "என்ன கறி வாடை அடிக்கிறது" என்றார். "கறி இல்லைய்யா" என்றான். அவர் நேரே சமையலறை போய்ப் பார்த்தார். அங்கே கறி வெந்து கொண்டிருந்தது. அவருக்கு பயங்கர கோபம் "என்னடா தாவீது கறி சமைக்கிறாய்?" என்று கத்தினார். அவன் சொன்னான் "அய்யா, கறி இல்லையய்யா" என்று. இருவருக்கும் காரசாரவிவாதம். தாவீது விளக்கம் சொன்னான்! "ஐயா நிச்சயமாய் இது கறி அல்ல; நீங்கள்

என்னைக் கூப்பிட்டு, என் மேல் தண்ணீர் தெளித்து இன்று முதல் நீ தாவூது இல்லை; தாவீது என்று எப்படி சொன்னீர்களோ, அப்படியே நானும் கறி வாங்கி வந்து அதன் மேல் தண்ணீர் தெளித்து இது முதல் இது கறியல்ல; கத்தரிக்காய் என்றேன். நான் எப்படி இப்போது தாவீதோ, அப்படியே இது கத்தரிக்காய் தான்" என்று அடித்துச் சொன்னான்.

இப்படியாய் ஞானஸ்நானம் பெற்ற சகோதரர் யாராயிருந்தாலும் இன்றே மனந்திரும்பி பாவமன்னிப்புக்கென்று இயேசுவின் மரணம் - உயிர்த்தெழுதல் போல, பாவத்திற்கு மரித்து நீதிக்கு உயிர்த்தெழும் முழுக்கு ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள்! இயேசு சீக்கிரம் வருகிறார்! (அப்.2:38; ரோ.6:1-11). வெறுமனே மனந்திரும்பாமல் ஞானஸ்நானம் எடுத்து என்ன பயன்?

❖ ❖ ❖

## 43

ஒரு நாள் இரண்டு பக்கத்து வீட்டாருக்கும் தகராறு. அதில் ஒருவன் பயங்கரமாய் கெட்ட வார்த்தைகள் பேசினான். இதனால் ஆத்திரமடைந்த மற்றவன் கோர்ட்டிற்குப் போய்விட்டான். அதையறிந்த மற்றவன் ஒரு பிரபல வக்கீலிடம் போனான். எப்படியாவது தண்டனை ஏதுமின்றி வழக்கு வெற்றிகரமாய் தள்ளுபடி செய்யவேண்டும் என்று கேட்டுக் கொண்டான். வழக்கறிஞர் யோசித்தார். கடைசியில் ஒன்றைச் சொன்னார். "கோர்ட்டிலே யார் எதைக் கேட்டாலும் "பேபே பேபே" என்று மட்டும் சொல்" என்றார். ஒரு நாள் கோர்ட்டிலே இவனைக் கூப்பிட்டு விசாரிக்கிறார்கள். "நீ இவரை மானக்குறைவாய் கெட்ட வார்த்தையால் பேசினாயா?" என்று வக்கீல் கேட்டார். அதற்கு அந்த ஆள் "பேபே... பேபே..." என்றான். மறுபடியும், உண்மையைச் சொல் என்றார். அப்போதும் "பேபே, பேபே" என்றே சொன்னான். அதைக் கேட்ட நீதிபதி, தானே அந்த ஆளை நோக்கி, "நீ தரக்குறைவாய் பேசியது மெய்தானே?" என்றார். அதற்கும் அந்த ஆள் "பேபே... பேபே" என்றான். "இவன் நிச்சயமாய் ஒரு ஊமையாயிருக்கிறான்; இவன் எப்படி தரக்குறைவாகப் பேசியிருப்பான்" என்று எண்ணி, அந்த வழக்கை தள்ளுபடி செய்து, நீதிபதி அந்த ஆளை விடுதலை பண்ணினார். சந்தோஷமாய் அந்த ஆள் வக்கீலிடம் போனான். வக்கீல், எப்படிப் பார்த்தாயா என் திறமையை?... சரி நீ எனக்கு கொடுக்க வேண்டிய ரூ.3,000 பீஸை கொடு என்றார். "பே...பே..." என்றான் அந்த ஆள். வக்கீலுக்கு கோபம் வந்து

விட்டது. "எங்கப்பா யார் தெரியுமா? போலீஸ் எஸ்.பி. உன்னை உள்ளே தள்ளிவிடுவேன்" என்றார் வக்கீல். அதற்கு அந்த ஆள், "உனக்கும் பே.. பே... உங்கப்பாவுக்கும் பே ... பே.." என்றான். இது கதை.

ஆக, புரியாத பாஷையினாலே நிறைய காரியங்களை சாதிக்க முடியும் என்று அறிகிறோம். பிசாசுக்கு உலகிலுள்ள எல்லாப் பாஷைகளும் தெரியும். ஆனால் நாம் பேசுகிற அந்நிய பாஷை மாத்திரம் தெரியாது. இதனால் நாம் தேவனுக்கும் நமக்கும் மட்டுமே தெரியும்படி அந்நிய பாஷையில் பேசி, தேவனிடமிருந்து பல காரியங்களை பெற்றுக் கொள்வோம். நமக்கு தேவன் தரும் எல்லா ஆசீர்வாதங்களையும் வெளி.12:8ன் படி நம்மீது ஏதோ ஒரு குற்றம் சாட்டி பிசாசால் தடுக்க முடியாததால், நாம் பாவம் செய்திருந்தாலும் தேவனின் ஆசீர்வாதம் தொடர்ந்து வரும்; பாஷை புரியாததாகையால் பிசாசு தடுக்க முடியாது; நமக்கு வெற்றி; இந்த பாஷையிலே தொடர்ந்து ஜெபிப்போம்.

❖ ❖ ❖

## 44

ஒரு நாள் கிறிஸ்தவ பள்ளிக்கு அதன் மேனேஜர் வந்தார். அந்த பள்ளியிலே உள்ள மதிலெல்லாம் இடிந்து கிடந்தன. அதை எடுத்துக் கட்டாமல் அசிங்கமாய் காட்சியளித்தன. தலைமையாசிரியரிடம் இது பற்றி அவர் கேட்டார். அவரின் பதில் சரியில்லாததால் கோபத்தோடே பக்கத்திலுள்ள வகுப்புக்குப் போனார். அந்த வகுப்பின் ஆசிரியரும் மாணவர்களும் மேனேஜரின் கோபச் சத்தம் கேட்டு, பயந்து கொண்டு இருந்தனர். அந்த வகுப்பு Catechism (ஞான உபதேசம்) வகுப்பு, வேகமாய் வந்த மேனேஜர் "ஒரு கேள்வி கேட்கப் போகிறேன்; சொல்லுங்கள்" என்றார். "எரிகோ மதிலை இடித்தது யார்?" என்று கேட்டார். ஆசிரியரும் மாணவரும் பள்ளி மதில் இடிந்தது சம்பந்தமாகவே துக்கமாய் இருந்ததால், ஒவ்வொரு மாணவனாய் எழும்பி, "சார் நான் இல்லை சார்; நான் இல்லை சார்" என்று சொன்னார்கள். மேனேஜர் கோபத்தோடு ஆசிரியரைப் பார்த்தார். "சார் இந்தப் பசங்களெல்லாம் இடிக்கமாட்டாங்க சார்; அவுங்க எல்லோரும் நல்லவங்க சார்" என்று ஆசிரியர் சொன்னார். அந்த மேனேஜருக்கு இன்னும் கோபம் அதிகரித்தது. ஆத்திரத்தோடு தலைமையாசிரியர் அறைக்குப் போனார். "என்னய்யா எரிகோ மதிலை இடித்தது யார் என்று கேட்டால், நான் இல்லை

நீ இல்லைன்னு பசங்க சொல்றாங்க; பசங்க இடிக்க மாட்டாங்க; அவுங்க நல்லவங்க சார் அப்படீன்னு ஆசிரியர் சொல்றாரு; இது என்ன கிறிஸ்தவப் பள்ளிக்கூடமா? சுத்த useless" என்று வேகமாய்ப் பேசினார் மேனேஜர். பழைய பயத்திலே இருந்த தலைமையாசிரியர் சொன்னார். "சார்; இப்ப அந்த கிளாசிலே உள்ள ரெண்டு மூணு பசங்க தான் இடிச்சாங்க; இப்ப அவுங்களே திரும்பக் கட்டித் தருவதாக வாக்குப் பண்ணியிருக்காங்க சார்..." என்று. மேனேஜருக்கு தூக்கிவாரிப் போட்டது. கேள்வியே புரியவில்லையே என்று வருந்தினார்.

இப்படித்தான் கிறிஸ்தவ சமுதாயத்திலும் பலர் பைபிள் வசனத்தை சரியாகத் தியானிக்காமல், என்ன புதிய கருத்துக்கள் கிடைத்தாலும் பழமையிலேயே நின்று, வாய்க்கு வந்த படி தங்கள் மாமிசமும் மனமும் சொல்கிறபடியே பிரசங்கிக்கிறார்கள்; புரிந்து கொள்கிறார்கள். அந்தோ பரிதாபம்!

❖ ❖ ❖

## 45

ஒரு சபைப் போதகர் ஞாயிறு ஆராதனைக்கு தயாராய் இருக்கிறார். அப்போது தனக்கு கோழிக் கறி மேல் ஆசை என்று தன் வீட்டுக் கோழியை சமைத்து வைத்து விட்டு, கோவிலுக்கு வா என்று தன் மனைவியிடம் சொன்னார். "சரியான நேரத்திலே வர வேண்டுமென்று நீங்களே பிரசங்கம் பண்ணினீர்களே; நான் எப்படி லேட்டாய் வருவேன்! என்னால் சமைக்க முடியாது" - மனைவி சொல்லி விட்டாள். அந்தப் போதகர் பக்கத்து வீட்டு மலையாள சகோதரன் கூசாகொரின் என்பவனிடம் போய் "கோழி தலையை வெட்டி கொழம்பு வை; தொடையை வெட்டி வருத்திடு" என்று சொல்லி விட்டு கோவிலுக்குப் போய்விட்டார். ஆராதனை நடந்து கொண்டு இருந்தாலும்,. போதகருக்கு கோழிக்கறியைப் பற்றியே ஞாபகம் இருந்தது. கூசாகொரின் கோழி மயிரைப் பிடிங்கிவிட்டான். தலையை வறுக்கணுமா.. தொடையை வறுக்கணுமா என்று மறந்து விட்டான். தவறுதலாய் சமைத்து விட்டால் போதகர் திட்டுவாரே எண்று எண்ணி அவரிடமே நேரே கேட்டுவிடலாம் என்று கோழியின் காலைப் பிடித்து தூக்கிக் கொண்டு கோயிலுக்கு வருகிறான். கூட்டம் கோயிலில் நிரம்பி வழிகிறது. போதகரைப் பார்க்க முடியவில்லை. Sideலே இருக்கக் கூடிய ஜன்னலுக்கு அருகே நின்று கொண்டு கோழியை தூக்கி தூக்கி காட்டினான். ஆல்டரில் நின்ற போதகர்

கண்டு கொண்டார். எப்படி சமைப்பது என்று அவனுக்கு தெரியவில்லை போலிருக்கிறது என்று அவர் எண்ணினார்.

உடனே தன்னுடைய ஜெபத்திலே போதகர் "பிதாவாகிய தேவனுக்கும், குமாரனாகிய கிறிஸ்துவுக்கும்" என்றார். சபையார், "தோத்திரம் உண்டாவதாக" என்றனர். போதகர் சொன்னார், "சூசாகொரின்.... சூசாகொரின்...." சபையார், "ஆராதிக்கிறோம் ஆண்டவரே" என்றனர். போதகர் சொன்னார், "தலையை வெட்டி கொழப்பு வை; தொடையை வெட்டி வருத்திரு..." சபையார், "ஆமென்" என்றனர். சூசாகொரின் புரிந்து கொண்டு வீட்டுக்குத் திரும்பினான். ஆனால் சபையாரோ ஒன்றும் புரியாமல் கிளிப்பிள்ளை போல ஆராதனை செய்கிறார்கள். இப்படித்தான் நிறைய விசுவாசிகள் இந்தக் காலத்தில் இருக்கிறார்கள். இவர்களுக்காய் ஜெபிப்போம்.

❖ ❖ ❖

## 46

ஒரு ஊரிலே, தெருவிளக்குக்கு கீழே அமர்ந்து, அந்த ஊர் வாலிபர்கள் நள்ளிரவு வரைக்கும் பேய்க்கதைகளைப் பேசிக் கொண்டே இருந்தார்கள். மோகினிப்பிசாசு, கொள்ளிவாய்ப்பிசாசு என்றெல்லாம் பல பிசாசுகளைப் பற்றி பேசிக்கொண்டிருந்தார்கள். பேசி முடித்துவிட்டு எல்லோரும் தங்கள் தங்கள் குடிசைகளுக்கு, பிசாசின் எண்ணத்தோடே போய் படுத்துக் கொண்டார்கள். அப்படியே வாலிபன் சேகரும் பிசாசின் நினைவிலேயே படுத்துக் கொண்டான். பயம்வேறு மனதுக்குள்ளே; தூக்கம் வரவே இல்லை. அருகில் மனைவி படுத்திருப்பதைக் கூட அறியவில்லை. வீட்டில் விளக்கும் இல்லை. ஒரே கும்மிருட்டு. வெளியே வீதியில் மட்டும் தெருவிளக்கு வெளிச்சம். இராத்திரியில் சேகரின் மனைவி எழும்பி வெளியே போய் சிறுநீர் கழித்து விட்டு வந்தாள்.

அவள் வரும் போது 'சரக் சரக்' என்று சத்தம் கேட்டது. உடனே சேகர் நன்றாய் கண்ணைத் திறந்து பார்த்தான். கதவு திறந்து இருந்ததால், தலைவிரி கோலத்தோடு ஒரு பெண் வரும் நிழல் தெருவிளக்கு ஒளியில் தெரிந்தது. தூக்கத்தில் பெண்கள் தலைவிரிகோலத்தோடுதானே காணப்படுவர். அந்த நிழல் நேராய் சேகரை நோக்கி வருகிறது. மிகவும் கதிகலங்கிய சேகர், "ஐயோ! மோகினிப்பிசாசு" என்று பலத்த சத்தமிட்டு எழும்பி ஓடி ஒரு தடியை எடுத்து வந்து, மனைவி என்று கூட உணராமல் அவளை அடித்தான். அவள்

"மச்சான்; மச்சான்" என்று கத்திக் கொண்டே கீழே விழுந்து மரித்துப் போனாள். விஷயம் கோர்ட்டு வரை போனது. சேகருக்கு ஆயுள் தண்டனை கிடைத்தது. இப்படித்தான் பிசாசானவன் ஏதோ ஒரு வழியில் உறவுகளைத் திருடவும், வாழ்க்கையை கொல்லவும், அன்பை அழிக்கவும் தொடர்ந்து வேலை செய்து கொண்டே இருக்கிறான்.

❖ ❖ ❖

## 47

ஒரு ஊரிலே எலித்தொல்லை பயங்கரம்; என்ன வெல்லாம் முயற்சிகள் எடுத்தும் எலிகளை ஒழிக்க முடியவில்லை. எலிபிடிக்கிற ஒருவனைத்தேடி அந்த ஊரார் அழைத்து வந்தனர். அவன் ரூபாய் 3000 கேட்டான். எவ்வளவு ரூபாய் ஆனாலும் பரவாயில்லை; தொல்லை ஒழிந்தால் போதும் என்ற எண்ணத்தில் ஊர்மக்கள் அதற்கு ஒத்துக் கொண்டனர். அவன் மறுநாள் காலையில் இசைக்கருவியை வைத்து இசைக்க ஆரம்பித்தான். இசையை எலிகள் கேட்டு அவனைப் பின் தொடர்ந்தன. அவன் ஒரு முனைத் தொடங்கி ஊரின் கடைசி வரை இசைத்துக் கொண்டே போனான். எல்லா வீட்டு எலிகளும் அவன் பின்னே போயின. ஊர் மக்கள் ஆச்சரியமாய்ப் பார்த்துக் கொண்டிருந்தனர். எலிகள் மட்டுமே மயங்கும் இசையோ என்று எண்ணினர். அவன் நேரே கடற்கரைக்குப் போனான். கடலுக்குள் இறங்கி நடந்தான். எலிக்கூட்டமும் கடலுக்குள் இறங்கின. அத்தனை எலிகளும் மடிந்து போயின. எலிபிடிக்காரன் திரும்பி வந்து பணம் கேட்டான். "இந்த கொஞ்ச நேர வேலைக்கு மூவாயிரமா? இந்தா 500 ரூபாய்" என்று ஊரார் கொடுத்தனர். அவனோ கோபித்துக் கொண்டு பணம் வாங்காமல் போய்விட்டான். ஊரார் அதைப் பற்றி கவலைப்படவில்லை. மறுநாள் காலையில் அவன் வந்து இசைத்தான். என்ன ஆச்சரியம்! ஊரிலுள்ள குழந்தைகள் எல்லாம் அந்த இசையை கேட்டு அவனிடம் வந்தன. பெற்றோர்கள் தடுத்தும் குழந்தைகள் நின்ற பாடில்லை. அவன் ஊரின் ஒருமுனை தொடங்கி இசைத்துக் கொண்டே போனான். பிள்ளைகள் கூட்டம், முதல் நாள் எலிக்கூட்டம் போல அவன் பின்னே போய்க்கொண்டே இருந்தது. இதைக் கண்டு ஊரார் பயந்து விட்டனர். தங்களுடைய குழந்தைகளும் எலிகளைப் போல அழியுமோ என்று கவலை கொண்டனர். அவன் நேரே மலைக்குப் போனான். குழந்தைகளும் பின்னாலே போயின. குழந்தைகள் எதைப் பற்றியும் கவலையில்லாமல் இசை இன்பத்தில் சந்தோசமாயிருந்தன.

இதைக்கண்ட ஊராரெல்லாம், எலிபிடிகாரனுக்கு மூவாயிரத்திற்கு மேலேயே தருவதாக ஒப்புக் கொண்டார்கள். அதனால் எலிபிடிக்காரன் இசையை நிறுத்தினான். குழந்தைகள் விடுவிக்கப்பட்டனர்.

இப்படித்தான் எலிகள் மட்டுமே கேட்டு பின்தொடரும் சத்தம் போல, பிள்ளைகள் மட்டுமே கேட்டு பின் தொடரும் சத்தம் போல, இயேசுவின் இரகசிய வருகையிலே அவரின் சத்தம் மணவாட்டியாகிய சபைக்கு மட்டுமே கேட்டு, அவரை நோக்கி விண்ணகம் செல்லும் காலம் விரைவில் வரப் போகிறது. ஆயத்தமாவோம்! ஆயத்தமாக்குவோம்! காதுள்ளவனுக்கே அது கேட்டும்.

❖ ❖ ❖

# 48

ஒரு ஊரில் ஒரு குருடன் இருந்தான். அவன் ஒரு நாள் ஒரு வீட்டிற்குப் போனான். அந்த வீட்டிலுள்ள ஒரு குழந்தை விக்கிக் கொண்டு கவலைக்கிடமாய் இருந்தது. என்ன விஷயம் என்று கேட்டான். குழந்தை பால் குடித்த போது விக்கிக் கொண்டது என்று வீட்டார் சொன்னார். பால் எப்படி இருக்கும் என அறியாத குருடன் இந்தப் பால் எப்படி இருந்தது என்று கேட்டான். வெள்ளையாய் திக்காய் இருந்தது என்றனர். வெள்ளை என்றால் என்ன என்று தெரியாத குருடன், "வெள்ளை எப்படியிருக்கும்?" என்று கேட்டான். அது கொக்கு போல் இருக்கும் என்றார்கள். "கொக்கு எப்படியிருக்கும்?" என்றான் குருடன். கையை கொக்கு போல் வளைத்து, "இப்படியிருக்கும் தொட்டுப் பார்" என்றனர். அவன் தொட்டுப் பார்த்தான். "அய்யோ! இவ்வளவு பெரிய பால், குழந்தை வாய்க்குள்ளே போனதினாலே தான் விக்கல்" என்றான் குருடன். அது போல ஐந்து குருடர்கள் யானையைப் பார்க்க வந்தனர். யானையின் காலை ஒருவன் தொட்டுப் பார்த்து விட்டு, "ஆகா! யானை பெரிய உலக்கை போல உள்ளதே" என்றான். யானைக் காதை ஒருவன் தொட்டு பார்த்து விட்டு, "ஆகா! யானை முறம் போல இருக்கிறதே" என்றான். யானை வாலை ஒருவன் தொட்டு பார்த்து, "ஆகா! யானை ஒரு சாட்டைக் கயிறு போல் உள்ளது" என்றான். இப்படியாய் ஒவ்வொருவரும் எடை போட்டனர்.

கிறிஸ்தவ உலகிலே பிரகாசமில்லாத மனக்கண் உடையவர்களும் உண்டு (எபே.1:17); மனக்கண் குருடர்களும் உண்டு. (II கொரி.4:4) இவர்கள்

எல்லாருமே இப்படித்தான் தாங்கள் தொட்டுப் பார்த்ததையே உண்மை என்று கள்ள உபதேச சத்தியங்களை போதிக்கின்றனர். இவர்களால் கிறிஸ்தவம் கறையாகிறது. இவர்களின் மனக்கண்களுக்காய் ஜெபிப்போம்! தேவனே மாற்றுவாராக!

❖ ❖ ❖

## 49

ஒரு நாள் வீட்டிற்குள்ளே திடீரென்று குரங்குகள் நுழைந்து விட்டன. உடனே எல்லோரும் சத்தம் கேட்டு விரட்டுகின்றனர். ஒன்றும் அசைந்த பாடில்லை. அவைகளை அடிக்கப் போகும் போதோ, கோபமாய் முறைக்கின்றன. எப்படி விரட்டுவது என்று புரியவில்லை. அந்த வீட்டிற்கு ஒரு பெரியவர் வந்தார். அவரிடம் விஷயத்தைச் சொன்னார்கள். உடனே அவர் உள்ளே போய் பார்த்துவிட்டு வெளியே வந்து "ஒரு குடை தாருங்கள்" என்றார். குடை தரப்பட்டது. பெரியவர் குடையோடு வீட்டுக்குள் போய், குடையை வைத்து விரட்டினார். அது வரை அசையாமல் இருந்த குரங்குகள், குடையைக் கண்டவுடனே வெளியே ஓடிப்போய் விட்டன. இதைப் பார்த்தவர்கள் எல்லாரும் ஆச்சரியப்பட்டனர். இப்படித்தான் "சில வேளைகளில் ஒரு சில பிசாசின் கிரியைகளை ஒழிக்கவோ பிசாசை விரட்டவோ முடிவதில்லை." காரணம் என்ன தெரியுமா? பெரியவர் குரங்கை விரட்ட குடையோடு வந்தது போல, நாமும் இயேசு கிறிஸ்து நமக்குத் தந்த அதிகாரத்தோடு, வல்லமையோடு செயல்பட்டால் எல்லாப் பிசாசுகளும் ஓடியே போகும். அதற்காகவே சர்வாயுத வர்க்கம் தரித்துக் கொள்ளுங்கள் என்று வேதம் சொல்கின்றது.

❖ ❖ ❖

## 50

ஒரு ஆபிசிலே ஒரு மேனேஜர் இருந்தார். அவர் தனது பியூனை கூப்பிட்டு, "நான் டிபன் சாப்பிட்டு வைத்துள்ள இலையை பொட்டலமாய் மடித்துக் கொண்டு போய் வெளியே போடு; - மாடியிலிருந்து போடுவதால் யாரும் ஆள் வருகிறார்களா என்று பார்த்துப் போடு" என்றார். உடனே அவன் இலையை பொட்டலமாய் மடித்து ஆபிசுக்கு வெளியே வந்து மாடியிலிருந்து

கீழ் நோக்கிப் பார்த்தான். யாராவது ஆள் வருகிறார்களா என்று பார்த்தான். ஒரு ஆள் வந்தார். மேனேஜர் சொன்னபடியே அந்த ஆளைப் பார்த்து அவர் மேலே போட்டு விட்டு உள்ளே வந்துவிட்டான். கொஞ்ச நேரத்திலே மேனேஜர் பியூனைக் கூப்பிட்டார். "என்னய்யா! ஆள் வர்றாங்களான்னு பார்த்து போடக் கூடாது; ஒரு ஆளு வந்து கம்ப்ளெய்ன்ட் பண்றாருய்யா" என்றார். "நீங்க சொன்னபடி தான் சார் யாரும் வர்றாங்களான்னு பார்த்து அந்த ஆள் மேலே போட்டேன் சார்" என்றான் பியூன். மானேஜருக்கு பயங்கர கோபம். "நான்சென்ஸ். இனி பொட்டலத்தைக் கட்டி என் தலைமேலே போடுய்யா" என்று கூறி விரட்டினார். பியூன் பேசாமல் போய்விட்டான். மறுநாள் மேனேஜர் டிபன் சாப்பிட்ட பின், அந்த பியூன் வந்தான். இலையை பொட்டலமாய் மடித்து நேரே மானேஜர் தலை மேலே போட்டான். "You fool; என்னய்யா செய்யறே?" என்று மேனேஜர் கத்தினார். "நீங்கள் நேற்று சொன்னபடி உங்கள் தலை மேலே தான் போடுறேன் சார்" என்றான் பியூன். இப்படித்தான் நிறைய கிறிஸ்தவர்கள் வேதத்திலே ஒரு வசனத்தை எடுத்துக்கொண்டு, அதற்கு முன்னும், பின்னும் உள்ள வசனப் பொருளை உணராமல், இந்தப் பியூனைப் போலவே நேரடி அர்த்தம் எடுத்துக் கொண்டு தாங்கள் தான் வேதப் பண்டிதர் என்று பெருமையடித்துக் கொள்கிறார்கள். நிச்சயமாய் இந்தப் பியூனைப் போல் இல்லாமல் வசனங்களை ஆராய்ந்தறிந்து முடிவுக்கு வரவேண்டும் அது தான் கிரமச் செய்கை; நல்ல உபதேசம்.

❖ ❖ ❖

## 51

ஒரு ஊரிலே சென்னை கூவம் ஆறு போல சாக்கடை கழிவுநீர் ஓடுகிற ஒரு ஆறு; அதைக் கடந்து போவதற்கு ஒரு ஒற்றையடி மரப்பாலம் இருந்தது. ஒரு நேரத்தில் ஒருவர் தான் கடக்க முடியும். அந்தப் பாலத்திற்குக் கீழே சாக்கடைக் கழிவுகள்; உளையான சேறு. ஒரு நாள் ஒரு ஆட்டுக் குட்டியும், பன்றியும் எதிர்எதிரான திசையில் மரப்பாலம் வழியாய் வந்தன. இரண்டும் ஒன்றையொன்று நெருங்கி முறைத்துப் பார்த்தன. ஒன்றும் ஒதுங்கி வழிவிடவும் இடமில்லை. பின்புறமாய் போகவும் இயலாது. மரப்பாலத்தில் காலடி எடுத்து வைக்கும்போதே இந்த இக்கட்டான நிலை பற்றி யோசித்திருக்க வேண்டும். இந்த சூழ்நிலையில் ஒன்றையொன்று இடித்துக் கொண்டு கடந்து செல்ல முயற்சித்தன. முடிவு - பரிதாபம்! இரண்டுமே அந்த சாக்கடை

சகதிக்குள் விழுந்தன. பன்றியோ அந்த சேற்றிலேயே சந்தோசமாய் புரண்டு நெகிழ்ந்தது. ஆனால் ஆட்டுக்குட்டியோ அதிலே அமிழ்ந்து போக சகிக்காமல் துள்ளிக் குதித்து வெளியே ஓடி வந்து விட்டது. இப்படித்தான் நிறைய இரட்சிக்கப்பட்டு முழுக்கு ஞானஸ்நானம் எடுத்த கிறிஸ்தவர்கள், தவறிப் போய் விடுகிறார்கள். இந்த ஆட்டுக்குட்டியைப் போல் எந்த காரியம் செய்தாலும் வசன அடிப்படையிலே யோசித்து செய்யாமல் சுயசித்தமாய் செயல்பட நினைக்கிறார்கள். இரட்சிக்கப்படாத பன்றி போன்ற கூட்டத்தோடுதான் தினமும் சந்திப்பு என்ற எண்ணம் மறந்து போகிறது. அறிந்தோ அறியாமலோ செய்த பாவத்தினால் கிறிஸ்தவன் தவறி விழுந்து விடுகிறான். பாவமாகிய சாக்கடையில் விழுகிறான். இயேசுவின் நாமம் தரித்தவன் என்பதால், ஆட்டுக்குட்டியைப் போல அவன் துள்ளி வெளியே வந்து விட வாய்ப்புண்டு. அதற்கு ஆவி உண்டு; வசனமுண்டு. அன்றாடம் வெற்றி உண்டு. ஆனால் இரட்சிக்கப்படாதவனோ பன்றி போல பாவச் சேற்றிலேயே கிடப்பான்; வெளிவர மனதே இருக்காது.

எனவே இரட்சிக்கப்பட்ட தேவபிள்ளையே! நீ பாவம் செய்தாயானால், உனக்குள் இருக்கும் ஆவியானவர் தேற்றி வழி நடத்துகிறபடியால் 1 யோ.1:8-10ன் படி உன் பாவங்களை அறிக்கையிட்டு இயேசுவின் இரத்தத்தினால் கழுவப்பட்டு வெளியே வந்துவிடு. பரிசுத்தத்தின் மேல் பரிசுத்தமடைந்து பரிபூரணத்தை நோக்கி ஓடு. பரிசுத்தவான்களைப் பாராதே! இயேசுவே உனக்கு வழிகாட்டி.

❖ ❖ ❖

## 52

ஒரு நாள் ஒரு புலி ஒருவனை துரத்திக்கொண்டு ஓடி வந்தது. அவன் தப்பிப் பிழைத்தேனென்று ஓடி, ஒரு மரத்தின் மேல் ஏறிக் கொண்டான். புலியோ அவனை விட்டபாடில்லை. அவன் இறங்கி வரட்டும் என்று மரத்தின் கீழ் காத்திருந்தது. பயத்தோடு இருந்த அவன் திடீரென்று ஒரு பெரிய குரங்கை அந்த மரத்தில் கண்டு கலங்கினான். அப்போது அந்த குரங்கு அவனைப் பார்த்து, "பயப்படாதே! நான் ஒன்றும் செய்யமாட்டேன்; உன் மேல் அன்பாயிருக்கிறேன்" என்று சொல்லி அவனுக்கு தன்னிடமிருந்த பழங்களை சாப்பிடக் கொடுத்தது. அவனும் சந்தேகமாய் சாப்பிட்டான். ஆனாலும் அவன் குரங்கை முழுமையாய் விசுவாசிக்கவில்லை. கீழே உள்ள புலி, "குரங்கே! அவனைக் கடித்து கீழே தள்ளு; நான் சாப்பிட வேண்டும்" என்றது. அதற்கு

“அவன் என் வார்த்தையை விசுவாசித்து இருக்கிறான்; அவனுக்கு ஒன்றும் தீமை செய்ய மாட்டேன்” என்று குரங்கு சொல்லியது. அவனும் அதைக் கேட்டுக்கொண்டே இருந்தான். சிறிது நேரத்தில் குரங்கு தூங்கி விட்டது. அப்போது புலி, அவனைப் பார்த்து, “நீ இப்போது குரங்கைத் தள்ளிவிடு, அதை நான் சாப்பிட்டுவிட்டு, உன்னை ஒன்றும் செய்யாமல் போய்விடுகிறேன்” என்றது. தனக்கு நல்லது செய்த குரங்கை நம்பாமல், தன் ஜீவனுக்காய், புலி சொன்னபடியே அவன் குரங்கை கீழே தள்ளிவிட்டான். புலி கப்பென்று பிடித்துக் கொண்டது. “பார்த்தாயா! அந்த மனிதன் உன்னை எப்படி விசுவாசித்தான்? முன்பே அவனைக் கடித்து கீழே தள்ளியிருந்தால் உனக்கு ஏன் இந்த நிலை? உன்னைச் சாப்பிடப் போகிறேன்” என்றது புலி. உடனே குரங்கு தப்பிக்கும் எண்ணத்தோடு, “இப்போது என்னை விட்டு விட்டாயானால், நான் மேலே போய் அவனைக் கீழே தள்ளி விடுவேன்; உனக்கு பெரிய விருந்து கிடைக்கும்” என்றது. புலியும் நம்பி விட்டுவிட்டது. குரங்கு மேலே போனது. அதற்குள் அந்த மனிதன் அயர்ந்து நித்திரையடைந்திருந்தான். புலி, “தள்ளிவிடு அவனை” என்றது. “மனுஷன் தான் என் வார்த்தையை நம்பாமல் போனான்; ஆனால் நானோ என்னை நம்பி வந்தவனுக்கு நன்மையே செய்வேன்; அவனைக் கீழே தள்ள மாட்டேன்” என்றது குரங்கு. புலி ஏமாந்து போய்விட்டது.

சகோதரனே! கேவலம் ஒரு குரங்கின் அன்பைப் பாருங்கள்! மனுஷன் குரங்கைவிட மோசமானவனாய், தன் ஜீவனுக்காய் விசுவாசத்தையே தூக்கி எறிய தயங்கவில்லையே! இப்படித்தான் இன்றைய தினம், தேவன் எவ்வளவு தான், தவறு செய்தபோதும் அன்பு காட்டினாலும், மனிதன் அதை விசுவாசிக்காமல், தன் ஜீவனுக்காய் தேவனுக்கு விரோதமாய் எதையும் செய்யத் துணிகிறான். இப்படி நாமிருந்தால் மாற்றிக் கொள்வோம்.

❖ ❖ ❖

## 53

ஊரில் ஒரு கணக்கப்பிள்ளை இருந்தான். அவன் பணம் சம்பாதிப்பதிலேயே குறியாக இருந்தான். எந்த ஒரு சிறிய காரியத்திற்குக் கூட லஞ்சம் வாங்குவான். அரசாங்க பணத்தை தன் இஷ்டப்படி கொள்ளையடித்தான். யாராவது எதிர்த்துப் பேசினால், அவர்களின் நிலம், விவசாயம், வீடு, தொழில் முதலியவைகளுக்கு விரோதமாய் செயல்படுவான்.

அவ்வூர் மக்களெல்லாம் அவன் மீது வெறுப்படைந்து அவனின் அம்மாவிடம் முறையிட்டனர். அவன் ஒரு நோயாளி. இந்த நிலையில் அவன் பணமே குறியாக இருந்தது. தன்னைப் பற்றி புகார் சொல்வோருக்கு தகுந்த பதில் கொடுக்க வேண்டுமென்று எண்ணினான்.

எனவே ஒரு நாள் ஊராரை எல்லாம் கூட்டி, "ஐயா, நான் உங்களுக்கு விரோதமாய் பல குற்றங்கள் செய்துள்ளேன்; நான் சீக்கிரமாய் சாகப் போகிறேன்; என் ஆத்துமா சாந்தியடைய ஒருவழி செய்யுங்கள்" என்று சொல்லி அழுதான். அவன் மேல் இரக்கப்பட்ட ஊரார் என்ன வழி என்று கேட்டனர். "நான் மரித்த உடனே ஒரு ஊசிக்கம்பில் என்னுடைய சரீரத்தைக் குத்தி தூக்கிப் பிடித்துக் கொண்டு சுடுகாட்டில் அப்படியே வைத்து கொளுத்தினால்தான் என் ஆத்மா சாந்தி அடையும்" என்று கெஞ்சினான். இது உலக முறைக்கு மாறாயிருந்தாலும் அவனின் அழுகையை ஏற்று இதற்கு ஊரார் சம்மதித்தனர்.

சில நாட்களில் கணக்கப்பிள்ளை இறந்து போனான். ஊரார் ஏற்கெனவே சொன்னபடியே அவனைக் குத்தி சுடுகாட்டுக்கு கொண்டு போனார்கள். சுடுகாட்டுக்கு அருகில் இரண்டு மூன்று போலீஸ் வேன் வந்து நின்றது. ஏன் இப்படி கொண்டு போகிறீர்கள் என்று போலீஸ் அதிகாரி கேட்டார். நடந்த காரியத்தை ஊரார் சொன்னார்கள். உடனே அவன் கணக்கப்பிள்ளை தங்களுக்கு எழுதிய கடிதத்தை காட்டினார். அதிலே, "இந்த ஊரார் என் மீது கோபம் கொண்டு என்னை ஊசிக்கம்பால் குத்திக் கொல்லப் போகிறார்கள்" என்று புகார் கொடுத்திருந்தான். "புகாருக்கும் நிகழ்ச்சிக்கும் சரியாக இருக்கிறது. நீங்கள் எல்லோரும் வேனில் ஏறுங்கள்" என்று போலீசார் ஏற்றினர். பாருங்கள் இந்த கணக்கப்பிள்ளை உயிரோடிருந்த போதும் கெடுதல் செய்தான்; செத்தும் கெடுதல் செய்கிறான். மரணத்தினாலும் நமக்கு நன்மை செய்த கர்த்தர் இயேசுவின் ஜனமாகிய நாம் இப்போதும் நல்லவர்களாய் இருப்போம்; மரித்த பின்னும் நம் மூலமாய் நன்மைகள் வரட்டும்; அதற்கேற்றபடி நம் செயல்கள் நடக்கட்டும். நாம் என்றுமே இயேசு சொன்னபடியே உலகிற்கு ஒளியாகவும் பூமிக்கு உப்பாகவும் இருப்போம். இந்த கணக்கப்பிள்ளை போல உயிரோடிருந்தும் செத்தும் தீமை செய்யக்கூடாது.

❖ ❖ ❖

# 54

கிராமத்திலிருந்து முதன் முதலாக ஒருவன் சென்னைக்கு வந்தான். அண்ணா சாலையில் உள்ள எல்.ஐ.சி. கட்டிடத்தைப் பார்த்து மிகவும் ஆச்சரியப்பட்டான். இவன் கிராமத்தாரால் பெரிய அறிவாளி என்று கருதப்பட்டவன். அப்போது மேலும் கீழும் இயங்குகிற லிப்டை கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான். ஒரு 50 வயது தாயார் அதற்குள்ளே நுழைந்தார்கள். லிப்ட் மேலே போனது. இரண்டு நிமிடத்திற்குள் அது கீழே வந்தபோது அதற்குள்ளிருந்து ஒரு 15 வயது வாலிபப் பெண் வெளியே வந்தாள். இதைப் பார்த்ததும் அவனுக்கு ஒரே ஆச்சரியம். என்னடா இது? இரண்டு நிமிஷத்துக்குள்ளே 50 வயது தாய், 15 வயது குமரியாய் மாறிவிட்டாளே! என்னே இந்த மிஷினின் மகிமை? மனிதனின் அறிவு இப்படியாய் வளர்ந்து விட்டதே! என்று எண்ணிக் கொண்டே சென்னை சென்ட்ரலுக்கு வந்து புதுடில்லிக்கு 3Tier பெர்த்துக்கு டிக்கட் வாங்கி ரயிலில் ஏறினான். பாதி தூரம் போனபின்னே, ஒரு ஸ்டேஷனில் காபி குடிக்க இறங்கினான். குடித்துவிட்டு திரும்பி வந்தபோது, தான் வந்த அதே வண்டி போல இன்னொரு வண்டி நிற்பதைக் கண்டு அதற்குள் ஏறினான். தன்னுடைய பெர்த்துத்தான் என்று எண்ணி அதிலே படுத்துக் கொண்டான் அந்த கிராமப்புற அறிவாளி. அந்த வண்டி சென்னைக்கு வருகிற வண்டி. கொஞ்சத் தூரம் போனபின்னே, கீழ் பெர்த்தில் படுத்திருப்பவரைப் பார்த்து எங்கே போகிறீர்கள்? என்று கேட்டான். அதற்கு அவர் நான் சென்னைக்கு போகிறேன் என்றார். இதைக்கேட்ட அறிவாளிக்கு ஒரே ஆச்சரியம் "என்னப்பா விஞ்ஞான கண்டுபிடிப்பு! ஒரே ரயிலிலே மேல் படுக்கையிலே இருக்கிறவன் டில்லிக்குப் போறான்; கீழ்ப்படுக்கையில் உள்ளவன் சென்னைக்குப் போறான். அறிவுன்னா அறிவு தான்" என்று தனக்குள்ளே சொல்லிக் கொண்டான்.

இப்படித்தான் இந்தக் கடைசி காலத்திலே ஆவிக்குரிய உலகிலே அறிவாளிகள் இருக்கிறார்கள். தாங்களும் சிந்தித்து அறிவதில்லை. மற்றவர்களையும் சிந்திக்க விடுவதில்லை. தாங்கள் கற்றது, சொல்வது, நம்புவதுதான், அறிவு என்று கருதுகிறார்கள். இப்படிப்பட்ட ஆவிக்குரிய அறிவாளிகள் ஒழியட்டும். தேவ ஞானமுள்ள விசுவாச மார்க்கத்தார் எழும்பட்டும்! ஜெபியுங்கள். வெற்றி நமதே!

❖ ❖ ❖

# 55

ஒரு சமவெளிப் பூமியிலே மூன்று ஆடுகள் இருந்தன. வசந்தகாலம் வந்த போது அவைகள் மிகவும் களிப்பாயிருந்தன. வெயில் காலம், மழைகாலம் வரும் போதெல்லாம் பாதுகாப்பு இல்லாமல் கஷ்டப்பட்டன. அப்போது அந்த மூன்று ஆடுகளும் தீவிரமாய் யோசித்து தங்களுக்கென்று தங்கும் வீடுகள் கட்டவேண்டும் என்று முடிவுகட்டின. அவற்றில் ஒரு ஆடு வைக்கோலால் ஒரே நாளில் வீடுகட்டி முடித்து சந்தோஷமாய் குடியேறியது. இரண்டாவது ஆடோ மரக்கட்டைகளால் கஷ்டப்பட்டு வீடு கட்டிக் கொண்டிருந்தது. இதைப் பார்த்து முதல் ஆடு நகைத்தது. மூன்று நாட்களுக்குள் மரக்கட்டை வீடும் கட்டியாயிற்று. மூன்றாவது ஆடு மிகவும் கஷ்டப்பட்டு, செங்கல் கொண்டு கல் வீடு கட்டியது. இதைக் கண்ட மற்ற ஆடுகள் வீணே பிழைக்கத் தெரியாமல் கல்வீடு கட்டி தன்னைத்தானே வருத்திக் கொள்வது முட்டாள்தனம் என்று சொல்லி ஏளனம் செய்தன. ஒரு நாள் ஒரு நரி வைக்கோலால் வீடுகட்டிய ஆட்டைத் துரத்தி வந்தது. வைக்கோல் வீட்டுக்குள் ஆடு நுழைந்த போதும், நரி பாய்ந்து வீட்டின் மேல் வீழ்ந்தது. வீடு சுக்குநூறாயிற்று. அந்த ஆடோ "தப்பித்தேன்; பிழைத்தேன்" என்று சொல்லி மரத்தால் செய்யப்பட்ட வீட்டிற்குள் நுழைந்தது. நரியோ விட்டபாடில்லை. துரத்திக் கொண்டு வந்தது. பசி வெறியில் ஒரே பாய்ச்சாலாய் வீட்டின் மேல் பாய்ந்ததில் மரக்கட்டைகள் ஒவ்வொன்றாய் உடைந்தன. உள்ளேயிருந்த இரண்டு ஆடுகளும் மரண பயத்தில் மூழ்கி இருந்தன. கல்வீட்டில் உள்ள ஆடோ அன்போடு அவைகளை அழைத்த மாத்திரத்தில் அவைகள் ஓடி உயிர் தப்பின. நரியோ கல்வீட்டு புகைக் கூண்டு வழியாய் கீழே இறங்க ஆரம்பித்தது. நெருப்பின் சூடு தாங்க முடியாமல் நரி ஓடியே போய்விட்டது. மூன்று ஆடுகளும் உயிர் தப்பின.

தேவனுடைய பிள்ளையே! இப்படித்தான் பல கிறிஸ்தவர்கள் தங்களின் ஆவிக்குரிய வாழ்வை உபத்திரவம் இன்றி தங்கள் மனதுக்கு ஏற்றபடி அமைத்துக் கொள்ள ஆரம்பிக்கின்றனர். ஏன்.... சபை ஊழியர்கள் கூட தங்களுக்கு ஏற்றபடி இலகுவாய், கஷ்டமில்லாமல், ஏதோ நாட்கள் கடந்தால் சரி என்ற எண்ணத்தில் தங்கள் இஷ்டப்படி ஊழியத்தை நடத்துகிறார்கள்; ஆபிரகாமைப் போல தேசம், ஜாதி, பெற்றோர் எல்லாவற்றையும் மறந்து ஊழியம் செய்யாமல், ஒருவேளை சோற்றுக்காய் சேஷ்டப்புத்திர பாகத்தை விற்றுப் போட்ட ஏசாவைப் போல் உலக வாழ்க்கைக்காய் தான் யாரென்பதை மறந்து ஊழியம் செய்கின்றனர். ஆனால் சாத்தானோ, தான் யாரென்பதை மறப்பதே இல்லை. இதனால்

அவர்கள் வாழ்வும் சாட்சியாயில்லை; ஊழியமும் சாட்சியாயில்லை. பிசாசானவன் அவர்களை விழுங்க வகை தேடுகின்றனர். பலர் அவனால் மறைந்து போகின்றனர். தேவசித்தப்படி, வசனமாகிய கல்லின் மேல் கட்டப்பட்டால் மாத்திரமே நிலைத்து நிற்க முடியும். அப்போதும் புகை போக்கி மூலமாய் சாத்தான் இறங்க நினைத்தாலும், ஆவியின் அனல் மூட்டலால் ஓடிப்போவான். எனவே தேவ கிருபையோடு உழைத்தே முன்னேறுவோம்! நிரந்தர இன்பம் பெறுவோம். குறுக்கு வழி மறப்போம்!!! சோதனையில் வெல்வோம்!!!! அல்லேலூயா!

❖ ❖ ❖

# 56

ஒரு ஆன்ட்டி அன்போடு நாய் ஒன்றை வளர்த்தாள். அந்த நாய் தான் தினமும் கறிக் கடைக்குப் போய் கறி வாங்கி வரும். ஒரு நாள் கழுத்திலே பையை மாட்டிக் கொண்டு கறியோடு ஒரு ஆற்றுப்பாலத்தைக் கடந்து வரும் போது, தண்ணீரை நாய் எட்டிப் பார்த்தது. வெயில் நேரமாயிருந்த படியினாலே தன்னைப் போல இன்னொரு நாய் தண்ணீருக்குள் தெரிந்தது. இதைப் பார்த்த உடனே "என்னைப் போலவே ஆன்ட்டிக்கு உதவி செய்ய இவன் எப்படி வந்தான்?" என்று எண்ணி, பொறாமையும் கோபமும் கொப்பளித்துக் கொண்டு வந்ததால், அந்த நிழல் நாயை கடித்துக் குதறி விட வேண்டும் என்ற எண்ணத்தில் தண்ணீருக்குள் பாய்ந்தது. வெள்ளத்தின் வேகம் அதிகமானதால் தன்னால் நீந்திக்கூட கரைக்கு வர இயலாமல் நாய் மரித்துப் போனது.

இப்படித்தான் பலகிறிஸ்தவர்கள் ஊழியத்திலும் சரி, சொந்த வாழ்க்கையிலும் சரி தன்னைப் போல யாரும் முன்னேறக் கூடாது; பெயரெடுக்கக் கூடாது என்று எண்ணி, தன் சக கிறிஸ்தவனிடமே பொறாமை காட்டுகிறார்கள்; கெடுக்க நினைக்கிறார்கள்; இவர்கள் உணரட்டும். இவர்களின் முடிவு இந்த நாயின் முடிவாகவும் இருக்கலாம்; அல்லது ஆக்கினைத் தீர்ப்பாயுமிருக்கலாம் (1 தீமோ.5:24) ஜாக்கிரதையாய் செயல்படுங்கள்! வருகை சமீபம்.

❖ ❖ ❖

## 57

ஒரு ஓவியர் மொட்டை மாடியில் நின்று படம் வரைந்தார். வரைந்த படத்தை முன்னின்று பார்த்தார். நன்றாக இருந்தது. இன்னும் கொஞ்சம் பின்னால் போய் பார்த்தார். அப்படியே படத்தை பார்த்துக் கொண்டே பின்னாலேயே போனார். அந்த மொட்டைமாடி கைப்பிடிச் சுவர் இல்லாதது. ஓவியர், படத்தின் மீது தன் முழு கவனத்தையும் வைத்து பின்னாலே போகும் போது கைப்பிடிச்சுவர் இல்லையே என்பதைப் பற்றி எண்ணமே இல்லை. இன்னும் ஒரு அடிபின்னால் வைத்தால் அவர் மாடியிலிருந்து விழுந்து மரித்துப் போயிருப்பார். அப்போது அவருடைய மனைவி அவருக்கு காபி கொண்டு வந்தாள். தன் கணவர் இன்னும் ஒரு அடி பின்னிட்டு வைத்தாலே மரணம் என்று அறிந்தவள் அவரைக் காப்பாற்ற ஒரு வழியும் தெரியவில்லை. உடனே தான் கொண்டு வந்த காபியை ஓவியர் வரைந்த அழகான படத்தின் மேல் ஊற்றினாள். உடனே ஓவியர் பின்னாலே கால் வைக்காமல், தான் உயிர் கொடுத்து வரைந்த ஓவியத்தை கெடுத்துவிட்டாளே என்ற கோப ஆவேசத்தில் மனைவியை நோக்கி ஓடி வந்தான். அவன் உயிர் தப்பி ஓடி வருவதைக் கண்ட மனைவியின் கண்களில் ஆனந்தக் கண்ணீர் வழிந்தது. அவர் வந்து அடித்துக் கொன்று விடுவாரே என்று பயப்படவே இல்லை. “ஏன் காபியை ஊற்றினாய்” என்று கொலைகாரனைப் போல் ஓவியர் கேட்டார். நிலைமையை விவரித்துச் சொன்னதும் அவன் மகிழ்ச்சி அடைந்தார். இப்படித்தான் தேவபிள்ளைகளே! உங்கள் வாழ்க்கையிலே என்ன வந்தாலும் ஏது வந்தாலும், தேவனைச் சார்ந்து வாழ்ந்திருப்பதால் உனக்கு எல்லாமே நன்மைக்கு ஏதுவாகவே தேவன் நடத்தவார் என்று உணருங்கள். நம் அறிவுக்கு எட்டியவைகள் எல்லாம் மாயை! தேவஞானமோ என்றென்றும் நம்மை நல்வழிப்படுத்தும்.

❖ ❖ ❖

## 58

ஒரு காட்டுவழியே விடுதலைப் போராட்ட வீரன் ஒருவன் போய்க் கொண்டிருந்தான். அப்போது ஒரு மரப்பொந்திலுள்ள கூட்டிலிருந்து ஒரு கிளி “விடுதலை வேண்டும்; விடுதலை வேண்டும்” என்று கத்தியது. இந்தக் கிளிக்குக் கூட விடுதலை இல்லையே என வருந்திய வீரன் எப்படியாவது அந்தக் கிளியை கூட்டிலிருந்து வெளியே எடுத்துவிட்டு விடுதலை

கொடுக்கலாம் என்று எண்ணி, கஷ்டப்பட்டு மரத்தில் ஏறிகூட்டைக் கலைத்து அந்தக் கிளியை வெளியே எடுத்து பறக்கவிட்டான். நாட்கள் கடந்தோடின. சில நாட்களுக்குப் பிறகு அந்த விடுதலைப் போராட்ட வீரன் அதே வழியாய் மறுபடியும் நடந்து வந்தான். அவனைப் பார்த்த உடனே, அந்த பழைய மரத்துப் பொந்தில் இருந்து கொண்டே அதே கிளி, "விடுதலை வேண்டும்; விடுதலை வேண்டும்" என்று கத்தியது. ஏற்கெனவே விடுதலை கிடைத்தும், மறுபடியும் அதே பொந்தில் கூடுகட்டி பழைய பல்லவியையே பாடிக் கொண்டிருந்த கிளியை எண்ணி அந்த வீரன் வருந்தினான். தான் என்ன பாடுபடுகிறோம்? தனக்கு இவலசமாய் என்ன கிடைத்தது என்பதை மட்டும் அந்த கிளி சிந்தித்தால் - உணர்ந்திருந்தால் - நிச்சயம் மறுபடியும் அதே வேண்டுகோளை கிளி வைக்காது. இப்படித்தான் அநேகர், இரட்சிக்கப்பட்ட பின்பும் கூட தனக்காய் தேவன் கல்வாரியில் வைத்துப் போன ஆசீர்வாதங்களை உணராமல், அதை விசுவாசத்தைக் கொண்டு தேவ வசனத்தால் அதைப் பெற்றுக் கொள்ளாமல் இருப்பதால் தான், மறுபடியும் மறுபடியும் ஆசீர்வாதம் இல்லையே.... இல்லையே என்று கதறும் நிலை உண்டாயிருக்கிறது; வெற்றி வாழ்க்கை என்பது அனுபவிக்கக் கூடாத கானல் நீராய் காட்சி அளிக்கிறது. இப்படிப்பட்டவர்களுக்கு திடமான விசுவாசம் உள்ளத்தில் இருக்கட்டும்! ஆத்மா வளரட்டும்! எல்லாவற்றிலும் இவர்கள் வாழ்ந்து சுகாயிருக்கட்டும். ஆமென்! அவநம்பிக்கை அழிந்து போகட்டும்! இந்த கிளியின் தன்மை மாறட்டும்! பாரம்பரியப் பழமைகள் ஒழியட்டும்!

❖ ❖ ❖

## 59

படகின் வழியாய் ஆற்றைக் கடப்பதற்கு ஒருவன், ஒரு புலியோடும், ஒரு புல் கட்டோடும், ஒரு ஆட்டோடும் நிற்கின்றான். படகுக்காய் காத்திருக்கிறான். படகிலே ஒரு நேரத்திலே அவன் தன்னோடு இரண்டு பொருட்களைத் தான் கொண்டு போக முடியும். படகு வருவதற்குள் எதை முதலில் கொண்டு போவது என்று யோசித்தான். புல்லையும் ஆட்டையும் கொண்டு போய் அடுத்த கரையில் வைத்து விட்டு திரும்பி வந்து புலியை கொண்டு போகலாம் என்றால், புலி போய் இறங்குவதற்குள் ஆடு புல் கட்டை சாப்பிட்டு விடுமே! ஆட்டையும் புலியையும் கொண்டு போய் அடுத்த கரையில் வைத்து விட்டு திரும்பி வந்து, புல் கட்டை கொண்டு போகலாம் என்றால் புல்கட்டு போவதற்குள் புலி ஆட்டை சாப்பிட்டுவிடுமே! இப்படியாய் யோசித்துக்

கொண்டே இருக்கிறான். படகு வந்து விட்டது. அப்போதே திடீரென்று ஒரு எண்ணம் வந்தது. அதன்படியே முதலில் புலியையும் புல்கட்டையும் கொண்டு போனான். மறுபடியும் வந்து ஆட்டைக் கூட்டிக் கொண்டு போனான். இது என்ன சரியான பட்டிக்காட்டுக் கதை என்று நீங்கள் நினைக்கலாம். ஆனால் இதிலே ஒரு உண்மையிருக்கிறது. இயேசு சொன்னார் தெரியுமா? "ஒருவன் வீடு கட்டும் முன்பு உட்கார்ந்து கணக்குப் பார்க்கக்கடவன்." எந்தக் காரியம் செய்ய ஆரம்பித்தாலும் முதலிலே திட்டமிட்டு செயலாற்ற வேண்டும். எதையுமே சிந்தித்து முடிவெடுக்க வேண்டும். அந்த சிந்தனை சுயமாய் இருக்கக் கூடாது. வசனத்தோடு இணைந்ததாய் இருக்க வேண்டும். நாளைய தினம் பற்றி கவலைப்படாதே என்று தான் வேதம் சொல்கிறதே ஒழிய, நாளைக்காய் திட்டமிடாதே என்று சொல்லவில்லை. இந்த கதையிலே வருபவன்,. ஆற்றைக் கடக்க தனக்கு இருந்த அனுகூலத்திற்கு ஏற்றபடி சிந்திக்கிறான். செயல்படுகிறான்; வெற்றி பெறுகிறான். அப்படித்தான் ஊழியமாயிருந்தாலும் சரி, குடும்பமாய் இருந்தாலும் சரி, தொழிலாய் இருந்தாலும் சரி, நமக்கிருக்கும் அனுகூலத்திற்கு ஏற்றபடி சிந்தித்துச் செயல்படுபவன் தான் ஞானவான். கர்த்தரே ஞானம் (1 கொரி.1:31) அவர் நம்மோடு இருக்கும் போது நம் ஞானமுள்ளவர்களாயிருப்போம் அல்லவா! கொஞ்சத்தை வைத்து உண்மையாய், ஞானமாய் செயல்படும்போது அநேகத்தில் அவர் நம்மை அதிகாரியாக வைப்பாரே! ஞானமாய் வசனத்தை நம்மிம் இருக்கும் முதலைக் கொண்டு திட்டமிடுவோம்! செயல்படுவோம்! வெற்றி பெறுவோம்!

❖ ❖ ❖

## 60

சீபா தேசத்து ராஜஸ்திரி சாலமோனின் ஞானத்தையும் புகழையும் கேள்விப்பட்டு அவனைக் காண வந்தாள். அவனுக்குண்டான செல்வங்களையும், அரண்மனையையும் கண்டு மிகவும் வியந்து போனாள். விடுகதைகளை விடுவிக்கும் அவனது வல்லமைக்கு ஒரு பரீட்சை வைத்தாள். சாலமோனிடம் இடதுகையிலும் வலதுகையிலும் ஒவ்வொரு மாலையைக் காட்டி "இதிலே எது உண்மையான மாலை?" என்று கேட்டாள். சபையோரெல்லாம் அறியாமல் குழம்பினர். இரண்டு மாலைகளும் ஒன்றாகவே காணப்பட்டதால், சாலமோனும் அமைதியாய் இருந்தான். ராஜஸ்திரி, தான் சாலமோனை வென்றுவிட்டதாக எண்ணினாள். திடீரென

ராஜா, ஜன்னல்களை எல்லாம் திறந்துவிடச் சொன்னான். தேனீக்கள் தோட்டத்திலிருந்து பறந்து வந்து ராணியைச் சுற்றி வட்டமிட்டன. கொஞ்ச நேரத்தில் எல்லா ஈக்களும் அவளின் வலதுகை மாலையில் அமர்ந்தன. "வலது கையிலுள்ள மாலைதான் உண்மையான மாலை" என்று உடனே சாலமோன் சொன்னான். இதைக் கேட்ட ராஜஸ்திரி, சாலமோனின் ஞானத்தை கண்டு வியந்தாள். தேவபிள்ளையே! சாலமோனுக்கு ஞானத்தைக் கொடுத்த அதே தேவன் தான் உன்னோடு இருக்கிறார். நீ கேட்டால் உனக்கும் அதே ஞானத்தை கொடுக்கமாட்டாரா? பின்னை ஏன் நீ பல காரியங்களில் ஞானமில்லாமல் இடறிப்போகிறாய்? உங்கள் பிள்ளைகள் ஏன் ஞானமின்றி தேர்வுகளில் தோல்வி அடைகின்றனர்? அல்லது குறைந்த மார்க் வாங்குகின்றனர்? ஜீவிக்கிற தேவனிடம் கேளுங்கள். கொடுக்கப்படும். ராஜஸ்திரி போன்றவர்கள் ஆச்சரியப்படும் வகையில் கொடுக்கப்படும். அல்லேலூயா!

❖ ❖ ❖


## ஆசிரியர் அழைத்தால் வரத் தயார்

ஞாயிறு ஆராதனைக்கு...
வேதப்பாடம் நடத்த...
வசன விளக்கம் கொடுக்க...
சுவிசேஷக் கூட்டம் நடத்த
கருத்தரங்குகள் வைக்க...
முஸ்லீம்கள், இந்துக்கள், நாத்திகர்கள்
ஆகியோரோடு கலந்துரையாட...
பைபிள் காலேஜில் போதிக்க...
உபவாசம், முழு இரவு ஜெபம்
போன்ற எல்லா கூட்டங்களுக்கும்

# ஆசிரியரின் வெளியீடுகள்

## ஆராய்ச்சிப் புத்தகங்கள்

- ★ கருகலான சத்தியம்
- ★ தெரிந்து கொள்ளுங்கள்
- ★ வியாதியா? மரணமா?
- ★ விசுவாசித்தேன்! ஆகையால் பேசுகிறேன்
- ★ வெளியரங்கமாகாத தீர்க்கதரிசனங்கள்
- ★ கதைகள் அறுபது
- ★ சிறுவர் ஊழியம்
- ★ இஸ்லாமியரின் கேள்விகள்
- ★ உங்களுக்குத் தெரியுமா?

## பாடல் சி.டி

- ★ ஆடியோ : ரூ. 50; வீடியோ : ரூ. 75
- ★ (ஆடியோ சி.டி. Vol. I, II, IV, VI மற்றும் DVD சி.டி. Vol. III, V)

## தீர்க்கதரிசன விளக்கவுரைகள் DVD

- ★ வெளிப்படுத்தின விசேஷம் (3 சி.டி)
- ★ தானியேல் (3 சி.டி)

(ஒரு செட் ரூ. 200/-)

## கருத்தரங்கு செய்திகள் DVD (ஒவ்வொன்றும் ரூ. 75/-)

- ★ இனி சம்பவிக்கப் போகிறவைகள்
- ★ குரான் சொல்லும் ஈசா தேவனா?
- ★ இயேசு ஏன் வரவில்லை?
- ★ வேதம் விஞ்ஞானத்திற்கு ஒத்திருக்கிறதா?
- ★ ஆவியின் அபிஷேகமும் அக்கினி அபிஷேகமும்
- ★ கள்ள உபதேசமும் கள்ள தீர்க்கதரிசினமும்
- ★ மாறுபாடுள்ள சந்ததி எது?
- ★ வேதம் பற்றி முஸ்லீம்கள் சொல்வது சரியா?
- ★ குரானில் குளறுபடிகள் உண்டா?
- ★ வேதத்தில் குளறுபடிகளா? பொய்த்தகவல்களா?
- ★ இயேசுபற்றி முஸ்லீம்களின் கருத்தென்ன?

**அரை மணிநேர DVD செய்திகள்** (ஒவ்வொன்றும் ரூ. 50/-)

★ இயேசு வருவாரா?

★ அந்தி கிறிஸ்து எப்போது வெளிப்படுவான்?

★ எது தேவசித்தம்?

★ வியாதி தேவனின் சிட்சையா?

★ திரித்துவம் உண்டா?

★ அந்நிய பாஷை

★ எது ஆவிக்குரிய சபை?

★ படைப்பின் இரகசியம்

★ மரணத்திற்குப் பின் நிலை என்ன?

★ தெய்வீக சுகம்

★ எது விசுவாச ஊழியம்? எது விசுவாச வாழ்க்கை?

★ இயேசுவின் இரத்தம்

★ பண்டிகைகள் தேவையா?

★ வரமும், கனியும், வல்லமையும், அதிகாரமும்

★ ஆசீர்வாதமும், சாபமும், வாக்குத்தத்தமும், தண்டனையும்

★ இயேசுவின் நாமத்தில் ஞானஸ்நானமா?

★ இயேசு சர்வவல்லமையுள்ள தேவனா?

★ சபைக்குள்ளே நிறைவேறுகிற - நிறைவேறப்போகிற தீர்க்கதரிசனங்கள்

★ நியாயப்பிரமாணம் ஏன் கொடுக்கப்பட்டது?

★ நிறைவேற வேண்டிய உடன்படிக்கைகள்

★ யார் அந்த இரண்டு சாட்சிகள்?

★ யார் அந்த 1,44,000 பேர்?

★ 70 வார தீர்க்கதரிசனம்

★ 2300 இராப்பகல் தீர்க்கதரிசனம்

❖ ❖ ❖

**"End Time Deliverence Ministry Trust"**

Savings Bank Account no : 10372388517

State Bank of India, Chennai - 600 054.

(IFS Code : SBIN0004675)

(வங்கியில் அனுப்பிய உடனே எங்களுக்குத் தெரிவியுங்கள்)

## நமது ஊழியங்கள்

1. "விசுவாச முழக்கம்" பத்திரிக்கை ஊழியம்
2. "விடுதலை கிறிஸ்துவின் சபைகள்"
3. "சேவியர் இறையியல் பயிலகம்" - பைபிள் காலேஜ் ஊழியம்
4. விசுவாசக் கருத்தரங்கு ஊழியம்
5. வசன விளக்கம் எப்போதும் (காலை 10 மணி முதல் இரவு 11 மணி வரை)
6. வெப்சைட், சி.டி., ஆராய்ச்சி புத்தகங்கள், Facebook, you tube, Whatsapp ஊழியம்
7. கஸ்தூரிபாய் ஆசிரமம்.

இன்னும் பல .......

# வேதப் பொன்மொழிகள்

- ★ ஆட்களைப் பாராதே! ஆண்டவனைப்பார்!
- ★ வசனமுள்ள வாழ்வு வளமான வாழ்வு!
- ★ விசுவாசம் வெற்றியைத் தரும்
- ★ Where there is vision there will be provision
- ★ போதக சிட்சையே ஜீவ வழி
- ★ பரிசுத்தமாக்குவது வசனமே
- ★ கிரியை இல்லாத விசுவாசம் செத்தது
- ★ Have positive confession
- ★ பூமியிலே நூறத்தனை ஆசீர்வாதம் உண்டு
- ★ இரகசிய வருகைக்கு ஆயத்தமா?
- ★ வேதத்தை விதை! விளையச் செய்பவர் தேவன்
- ★ பிதாவாகிய ஒரே தேவன் நமக்குண்டு
- ★ திக்கற்றவர்களையும், விதவைகளையும் விசாரிப்பதே மாசற்ற பக்தி
- ★ ஆசீர்வாதமும் சாபமும் மனிதனே சுதந்தரிக்க வேண்டும்
- ★ வாக்குத்தத்தம் ஒன்றல்ல; இரண்டல்ல; ஏராளம்
- ★ மூல உபதேசம் இல்லாத சபை கிறிஸ்தவ சபையல்ல
- ★ பரிசுத்த ஆவி பெற்றதற்கு அடையாளம் அந்நிய பாஷை

# Rev.Dr.A.சேவியர்

**B.Sc.M.A.(Theo).D.D.**

( சுவிஷேசகர்,போதகர்,எழுத்தாளர் )



## ஆசிரியரைப்பற்றி....

1951 ஆம் ஆண்டு மே மாதம் 16ம் நாள், தமிழ்நாடு, திருச்சி மாவட்டம் மணப்பாறை அருகே உள்ள சின்ன உடையாபட்டி என்ற குக்கிராமத்தில் ஏழை குடும்பத்தில் ரோமன் கத்தோலிக்க சபையை சார்ந்த பெற்றோருக்கு மகனாய் பிறந்தவர்தான் Rev.Dr.சேவியர்.
குழந்தை பருவம் முதல் பக்தியோடு வளர்க்கப்பட்டவர்.பி.எஸ்.சி..(கணிதவியல்) படிப்பை திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரியில் முடித்து, தொலைபேசி துறையில் பணியில் சேர்ந்து, படிப்படியாய் பதவி உயர்ந்து, டிவிஷனல் இன்ஜினியர் ஆக ஆனார்.

கல்லூரியில் படிக்கும் போதே நாத்திகனாய் மாறி இயேசுவுக்கு எதிராளியாய் மாறினார். இந்நிலையில் நெல்லை மாவட்டம் குலசேகர பட்டிணத்தை சார்ந்த சி.எஸ்.ஐ சபை பெற்றோரின் மகள் கஸ்தூரிபாய் என்பவரை 16.06.1976 அன்று மணந்தார். பக்தியுள்ள மனைவியின் நடக்கையாலும், ஜெபத்தாலும் ஆசிரியருக்குள்ளே ஒரு மாற்றம் உருவானது.

1981 ல் நடந்த ஒரு மோட்டார் சைக்கிள் விபத்தில் ஏற்பட்ட மூளை சம்பந்தமான நோயிலிருந்து 1985-ல் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் கிடைத்த விடுதலையால் ஒரு பெருத்த மாற்றம் உண்டாகி, 1986 நவம்பரில் இரட்சிக்கப்பட்டு ஆவிக்குரிய கிறிஸ்துவரானார்.
பெந்தகோஸ்தே சபையில் நுழைந்தார். செவன்த் டே அட்வென்டிஸ்ட் சபையினரால் ஈர்க்கப்பட்டு சபை மாறியதால் வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்த்து, அந்த சபையிலிருந்து வெளியேறி, ஆவிக்குரிய விசுவாசியாய் மாறினார். விசுவாச விதையை தமிழகத்தில் விதைத்த தேசத்தின் தீர்க்கதரிசி ஜஸ்டின் பிரபாகரனின் போதனையால் விசுவாசத்தில் பெலப்பட்டு, ஊழியத்தில் நுழைந்தார். அநேக குக்கிராமங்களில் சுவிசேஷ ஊழியம் செய்தார். டிராக்ட்ஸ் ஊழியம், தெருப்பிரசங்கம், "எப்போதும் வசன விளக்கம்", போன்றவையெல்லாம் இவருக்கு தேவன் தந்த வரம். மிகவும் சிறிய சபைகளுக்கும் சென்று சத்தியத்தை பரப்பினார். கடைசி கால விடுதலை முழக்கம் என்ற மாத இதழை ஆரம்பித்து அதன்பின் வசன முழக்கம் என்ற பத்திரிகையை நடத்தினார். விசுவாசம் வெற்றியை தரும் என்ற தாரக மந்திரத்தை போதித்தார். வாரந்தோறும், மாதந்தோறும், வருடந்தோறும் வீட்டிலும், சென்னையிலும், மாவட்ட தலைநகரங்களிலும் கருத்தரங்குகள் நடத்தி கிறிஸ்துவ சபைகளில் பெரிய எழுப்புதலை உருவாக்கினார்.
எந்த ஊழியத்திற்கும் யார் அழைத்தாலும் எதையும் பார்க்காமல் உடனே ஒத்துக்கொள்ளும் சுபாவம் உள்ளவர்.
தேவனின் தரிசனப்படி, கஸ்தூரிபாய் ஆசிரமம், சேவியர் இறையியல் பயிலகம், விடுதலை கிறிஸ்துவின் சபை, விசுவாச கருத்தரங்குகள், ஊழியர் கருத்தரங்குகள், வெப்சைட் போன்ற பல ஊழியங்களில் இணைந்து பணி செய்து வருகிறார். தற்போது "விசுவாச முழக்கம்" என்ற மாத இதழ் கௌரவ ஆசிரியராகி ஒரு வசனப்புரட்சி செய்து வருகிறார். அன்னாரின் ஊழியம் விரிந்து பரவ ஆத்துமாக்களை வருகைக்காய் ஆயத்தமாக்க ஜெபியுங்கள்.

**Folllow Us**

9444979822

endtimedeliveranceministry

youtube/endtimetrust

revdrxavier@gmail.com